ஸ்ரீ நாம...

எ...

கீர்த்தனை, ஜாவளி, சிந்து, ...கழ், ப...

நாடகமெட்டுகளில்

ஸ்ரீகண்ணன் பாட்டு.

இஃது

ஆழ்வார்திருநகரியிலிருக்கும்

ந...ந்திலா

ரா. நார...யணராயரால்

இயற்றப்பட்டு

திருநெல்வேலி கஸ்பா

ஸ்ரீ கிருஷ்ணவிலாச அச்சுக்கூடத்தில்,

பதிப்பிக்கப்பெற்றது.

ரக்தாக்ஷி வருஷம்

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

1924

822:4N
N24
18104

தம்.

		பிழை	திருத்தம்.
		தீவிரமதாக்க்	தீவிரமதாகக்
	7	கலகலென	கலகலென கலகலென
	1	இனிதோடிவாபாய	இனிதோடி வாராய்
	22	மகிழ்வரூரா வாண	மகிழ்வரோ வர்ண
	3	கஸ்றூரி	கஸ்தூரி
23	8	கண்ணனென்ருல்	கண்ணனென்ருல்
24	31	(விட்டுப்போனவை)	பார்த்தலே கலம் (2) காதன் வருவரோ)
26	25	தருநீல்	கருநீல
29	16	எத்தொழிலிலும்	எத்தொழிலும்
31	15	கோழி	கோழிகள்

ஓம்.

ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மனே நம:

ஸ்ரீ நாமாம்ருதம்.

காப்பு விருத்தம்.

அச்சுதானந்தனே யமரர்த்துதி மெய்யனே
இச்சையாலிலையிற் பள்ளிகொள்ளய்யனே
இச்சையால் நின்னெழி லிணையடியை யோத
இச்சமயமே யீந்தரு ளினிய நன்மொழியே.

ஸ்ரீ கண்ணன் துதி 'முத்திநெறி.'

கண்ணனே யென்னப்பன் கண்ணனே யென்னம்மை
கண்ணனே யென்னுயிர் கண்ணனே யென்னுடல்
கண்ணனே யென் செல்வம் கண்ணனே என் தெய்வம்
கண்ணனே கண்ணனே கருதுமோ ரெப்பொருளும். (1)

கண்ணவைகள் பொற்கமலம் கதிர்முகமும் செங்கமலம்
எண் கையுநெஞ்சமும் எழிலமைந்த நற்கமலம்
வண்ணமாம் ஆரமும் மலர்பூத்த நாபியும்
பண்ணிசைப்பாதமும் பார்துதிசெய் பொற்கமலம். (2)

கஸ்தூரித் திலகமிட்டான் கனிவாயிற் கீதமிட்டான்
விஸ்தார நன்னடையை விதவிதமாய்த் தானளித்தான்
மத்தாடு வேளையிலே மதுவெண்ணெ யள்ளியுண்டான்
எத்தாலும் மறப்போமோ எம்மச்சுத நற்பொருளை

முடியழகோ அதியழகு முகமதுவோ துதியழகு
இடையழகோ வெகுவழகு இசையணியோ மிகவழகு
அடியழகோ புதுவழகு அதனிடையே யொலியழகு
அடியவர் காக்கும் அவ்வழகே பேரழகு.

பொன்னார் மேனியனே:— * ஆதிநாததேவ அடியேனை யாண்டருள்வா வேதநாயகனே வேழமே காத்தவனே (ஆதி) எல்லா ஐஸ்வரியம் எளியேனைக் கூடுவண்ணம் நல்லோர் நட்பினையே நாளுமே தந்தருள் நீ (ஆதி) நின்பால் நல்லபக்தி நமமாய்ப்புரியுவண்ணம் எந்நாளீந்தருள்வா ஈசனேநேசமாகி (ஆதி)

சரணக்கமலாலயத்தில்:— கமலமலர்நேர்முகத்தில் மயிலிறகுத்தோகையிட்டு மணங்கமழும் சாந்துப்பொட்டு ஒளிவீச, கருணைபொழி சீர் பெருக்கம் திருவிழியின் பார்வைமிக்குக் கனிபொழியும் வார்த்தையுற்ற மகிழ் தேவா (1) விமலவிருகை வளைத்து இடைமருகில் நேரில் வைத்து உலகமெலாம் தான்களிக்கும் வண்ணமாக, விரிமலரின் பாதமிட்டுத் அரிதமுடன்மேவியுற்று, எழில்பெருகுமாலையிட்டப்பெருமாளே, (2) அமரர்குல வாழ்வனைத்தும் தனதெனவே யேற்படுத்தி அனுதினமும் நேசமுற்று இடைசோரா, அளவரிதுமால்நடத்தைத் தனிமொழியில் நான்குறித்தல் முடவனறுதேன்குடித்தக்கதையாகும், (3) கவனசக்தியாதுமற்று நடையுடைகள்தான் தவிர்த்து கடையில் கடையாக இற்று நடப்பேனை, கரமலரின் பூவையிட்டுப் பாவியெனைச்சேர்த்தணைத்து அருள்மழையைத் தானளிக்க வருவாயே (4)

லாவிப்பாட்டு:— கோபி பாலா திவ்ய ரூபசீலா,— கண்ணா வாடா மணிவண்ணா வாடா, கலியெல்லாம் இன்றே நீங்க இங்கே வாடா (கண்ணா) தேவகியின் பாலா புகழ்தேவ ரனுகூலா, க்ஷேமமெல்லாமீந்திடவே தீவிரமதாகக் (கண்ணா) கோகுலத்துச்சீலா மகிழ் கோபியவர் லீலா, வ்யாகுலமே முற்றும் நீக்க விரைவிலே வாடா (கண்ணா) உன்னுமமதுபாட நல்லுள்ளத்தினைத்தாடா பன்னகசயனஸ்ரீநாரணனினேச (கண்ணா)

---

* :— இந்த அடையாளத்துக்கு முன் இருப்பது மெட்டு ...து இராகம்.

18/64

இசைந்து ஏறும்:— கருத்தமுகிலினை நிறத்தவுட லினைப் படைத்தமுராஹரிப் பெருமாளே, கபித்தக்கனியினைச் சிறுத்த எருதினால் உதிர்த்தவரை நிகர் காத்தோனே, பெருத்த முதலையும் உரத்தபலமுடன் கடித்தசமயமே, துயராகி, பெலத் தகரியது வலுத்தகுரலுடன் நினைத்து நினதொரு திருநாமம் சிரிக்கப்பொருள்கொளும் சுருக்குமொழியினில் அழைத்தநிமி ஷமே யருள்வோனே, வெறுக்கு நடையுடன் பழக்கமவைத னால் படைத்தபிறவியும்உயர்வாக, சிரிக்கும்வதனமும்பெருக்கு கருணையும் உருக்குமணியவள் அணைமார்பா, சிறக்கத்தமியனை மிருத்ததுயையினை கொடுத்துவுதவவே வருவாயே.

வாவா முருகவேலவ:- ஆனந்தபைரவி ஆதிசாப்பு:—வாவா ஹரியேதேவனே வல்லவதுரையே (வாவா) மேவி யென்னையே இன்பமீந்திட விரைவில் வந்தருள் ரங்கநாதனே (வாவா) மோரில் வெண்ணை மிதப்பதுபோல் மோகனுங்கனே சுலபமாக வே நேராய் வந்தெனை முத்தமாடிட நீரஜாக்ஷனே கீர்த்தன முடன் (வாவா) சின்னச் சின்னப்பாதமிட்டுச் சிங்காரமாம் நாதமிட்டு பொன்னுமேனியுமெங்கு மிலங்கிடப் பொருந்தி யென்னிடம் நகைமுகமாக (வாவா) பக்திசெய்யும் நாரணனைப் பரிந்து விளையாடுவோனே யெத்திசையோரும் வந்து யோற் றிட் உற்றகோலனே முற்றிசைந்து நீ (வாவா)

மீனாட்சிரமணு வேதாந்த சுகுணு:— கோபால கிருஷ்ண சுவாமி யோடிவா மேவி (யென்தன் கோபால) செய்யாதே வம்பு சேர்ந்திடும் கும்பு கண்ணனே யென்னிடம் ஓடியேவாவா கனிவாயின் முத்தம் ஈண்டருள் தாதா (கோபால) சொன்னே னே அய்ய நம்புவாய்மெய்ய வெண்ணையும் பாலும்கொள்ளையே யீவேன் புண்ணியயிப்போ புகழுடன் கூடி (கோபால) வேறே தும் பார்க்கேல் நேரத்தைப்போக்கேல் விதவிதவிருந்துகளுண் டிடவாவா இதந்தருனல்ல ராயனினைய (கோபால) ...லை ...கு

கமாஸ் ஆதி தாளம்;— வாமுராஹரி நகதரனே ...ய்) யாண்டருள் துதிபரனே (வா முராஹரி) க்ஷேமமான வா

நேயமர்கீர்ந்து தீவிரமாகவே எளியேனைக்காத்திட (வாமுரஹரி) என்னையீன்றவனன்றோ இதிலேதும் சந்தேகமுண்டோ என்னை யீன்றவனன்றோ பன்னகசயனனே யரிமளரங்கனே பறந்தோடி யே வந்துப்பரமானந்தம் ஈவாய் (வாமுரஹரி) தாமசமேனோ சொல்லாய் என்னை தயையுடனாளாய் தாமசமேனோ சொல்லாய் காமித பலதாயகவுன்தனை—கழலடியினைப்போற்றிக் கைதனைக் குவிக்கிறேன் (வாமுரஹரி) வனத்திலே யானை கூவவும் க்ஷணமே யாண்டவனே மனமதிரங்குவாய் நினைத்த என்தனையே நேம மாய்க்காத்தருள் நீடிசைராயணி னிசைமலர்க்கண்ணா (வாமுர ஹரி)

என்தன் சிங்காரக்கோகிலம்:— என்தன் சிங்காரக்கண்ணனே யிங்கே வாடா யென்தன் சிங்காரக்கண்ணனே பொன்னான மேனியிது என்னமயக்கிதிது கட்டணிவகைகள் கெல் கெல் கெல் காதுக்கினிய நாதம் ஜில் ஜில் ஜில் பக்கமே யோடி யிங்கே நில் நில் நில் உன்னோர் முகத்திலே ஈர் புறத்திலே சீரா முத்தமே நாடி யென்னையே கொள் கொள் கொள் (என்தன் சிங்காரக்கண்ணனே) சிந்தை மகிழ் வூட்டுவிக்கும் ராஜகோபால சிங்காரநடைகாட்டாய் பாலகோபால உள்ளத்தினைக்கொள்ளை கொண்டக் கள்ளகோபால உன் பொய்யானக் கதைகளைத்தள் தள் தள் நல்லநிஜமானக்கதைகளைச் சொல் சொல் சொல் அதி ருசியான வெண்ணைபாலே மெல் மெல் மெல் இங்கு ஓரிடத் திலே சீர்குணத்துடன் கோணுகியே வீற்றிருப்பாய்க் கேள் கேள் கேள் (2) அற்புதமாம் காட்சிகாட்ட வா வா வா புக ழற்புதமாம் ஆட்சி நாட்ட வா வா வா எழில் கற்பனைக்கு மேலானதாம் காட்சியெல்லாம் ஒன்றுகூட்டும் பொன்னொளிர்த் திலகம் தானும் கம் கம் கம் ஜயமார்க்கும் சங்குநாதம் பம் பம் பம் புகழ் மத்தளத்தினோசை வந்து திம் திம் திம் இவையத் ...யும் ஒத்திசைய பக்தரா யனன்னேயனே வா வா வா (3)

...ரார் சபை வாழும்:— வாடாக்கண்ணவாடா, வாடா ...லா வாடா, வாடா நீ யிங்கேவாடா வ்ண்ணமுத்தம் ...ய (வாடா) மச்சகூர்ம வாடா வராகநரஹரி—பச்சை

யாலிலைமீது பாங்குடனமர்ந்தவா (வாடா) ஆனந்தரூபனே ஆனந்தம் ஈவோனே தீனரக்ஷக யிங்கே திருவருளீந்திட (வாடா) அடிமேலடியிட்டு அருள்பார்வைத் தானீந்து அடியேனுன் மகிழவே அகமலர்ந்தோடிவே (வாடா) தெவிட்டாதநற்கனியே சின்மய நல்வடிவே கவிராயனவனுள்ளம் களித்தாடும் துரையே (வாடா)

பளபளென பளபளென:— கலகலெனக் கண்ணாஓடிவா மணிவண்ணா ஓடிவா கன்னமீதில் கனிவாய் முத்தம் நல்க ஓடிவா (கலகலென) நிலவெழுமாம் நின்மேனியைக்காட்ட ஓடிவா ஐயா காட்ட ஓடிவா நீதரித்த அங்கி குல்லாய்ப் பார்க்க ஓடிவா கலகலென) குடுகுடென குடுகுடென குதித்து ஓடிவா அழ காய்க்குதித்து ஓடிவா கோலமிகும் நின்னடையக்காட்டி யோடிவா (கலகலென) மடிமீதில் நன்கமர்ந்து மகிழவோடிவா இப்போ மகிழவோடிவா வயிறுமுட்ட வெண்ணைபாலைத் தருவேனோடிவா (கலகலென) குதித்து வந்து குதித்து வந்துக்கூத்துப் போடவா நல்லக்கூத்துப் போடவா கோமாளியின் வேடங் கொண்டு குணமாயாடவா (கலகலென) சிரித்துக்கொண்டுசிரித் துக்கொண்டு இங்கே யோடிவா சங்கா யிங்கே யோடிவா செங் கமல பொற்கண்ணனே விரைவிலோடிவா (கலகலென) தப்புத் தண்டா செய்யுமொருத்திருட்டு கோபாலாப்பொல்லாத்திருட் டுக் கோபால ஜாடையெல்லாம் நீ யளித்துக் குதூஹலமாகக் (கலகலென) ஒப்புதேடாவுன்தனக்கு எந்தவேடமும் மெய்யா யெந்தவேடமும் உல்லாசமாய்ராயனேய உய்யாரமாக (கலகலென)

குன்தளவாரளி ஆதிதாளம்:— ஓடிவருவாய்க்கண்ணாப் பாடிவருவாய் ஓடியாடியே நாடி யென்னையே மகிழ்வை யீந்திட (ஓடிவருவாய்) காலைதூக்கியே கொஞ்சம் சாயலாக்கியே மாறிமாறியே யிடவலமாயிசைந்தழகாக (ஓடிவருவாய்) குழலை யேந்தியே யூதிக்குணமாய்ப் பாடியே அழகு யரவுமே நன்கு கூட்டியே அடியேனுள்ளமே மலர்ந்து மகிழவே (ஓடிவருவாய்)

ஜாடைஜாடையை தேவா மேலே மேலீந்து-தேடு கண்களும் மூடாவண்ணமே சிராங்காட்சியையீண்டளித்து நீ (யோடிவருவாய்) பாத சதங்கை நேராய்த்தாளம் தாங்கியே-நீதமாதவ நேர்மையாகவே ஆசையூட்டியே(ஓடிவருவாய்)பேஷ-பேஷய்ய புருவஜாடை சேர்த்தியே-ஆரெம்பையர் தேடியுன்னிடம் பயிற்சிகொள்ளுவர் (ஓடிவருவாய்.)

வேட்டை யாடினுன் ராஜன்:— கண்ணன் வந்தானே மணிவண்ணன் வந்தானே மண்ணும்விண்ணும் எங்கும்போற்ற மகிழ்வுடனே கூடியே சிராய்நேராய்ந் திருவருளையீயவே(கண்ணன்) பரிமளங்கூட யாரும் பார்த்துவந்திட வரம் அருளும் நேயக்கண்ணன் நடனமாடி யிங்கனே நல்லார் பொல்லார் யாருமுவந்து மகிழ்பெறக் (கண்ணன்) பங்கயக்கண்ணன் நல்ல பவளச்செவ்வாயன் செங்கதிரின் மணிமுடிகள் திசைகளெங்கும் பரவவே அங்கஜனய்யனும் இங்கிதமுமாகவே (கண்ணன்) தேவதேவேசன் உளம் சிந்திப்போர் நேசன் மேவிவந்து இன்பம் நல்கும் மேகவண்ணன் ஸ்ரீதரன் கோபாலன் கோவிந்தன் கோபியவர்கள் மனோஹரன் (கண்ணன்) ஹாரகேயூரன்நவரத்னபூஷிதன் காரணன் தன்னுள்ள மீதில் நர்த்தனமே செய்பவுன் பாங்காய் ஈங்கே பரிவுடனே கூடியே (கண்ணன்)

பியாகு ஆதிதாளம் துருசு:— கண்ணன் வந்தான் கண்ணன் வந்தான் கண்ணன் வந்தானே கலியெல்லாம் நீங்கிடவே களிப்புதானோங்கிடவே (கண்ணன்) மயிற்றோகைபொன்முடியும் மயலையே தானெழுப்பும் தையலர்கள் கண்டு நாணும் சரசமான திவ்ய லீலன் (கண்ணன்) பட்டுக்குட்டை நன்றாய்க் கட்டி நெற்றிப்பொட்டோலடிக்க கெட்டிக்காப்பு அணிவகை நாதங்களைத்தான் கொடுக்க (கண்ணன்) சந்த்ரசுப்ரகாசனிவன் சங்கடங்கள் தீர்க்குமீசன், இந்திரர்களனைவர்க்கும் இன்பமூட்டு ஹரிதேவன் (கண்ணன்) வாயிடையே வேணுவைத்து வண்ணவிரலாலிழைத்து நேயமான கீதங்களை விதவிதம் தானளித்துக் (கண்ணன்) ஆடலுடன் பாடல்கூட்டி யானந்தமே

யெங்கும் நாட்டி தேடரிய சிற்சுகன்மால் திசையெங்கும் புக ழார்த்துக் (கண்ணன்) பட்டமரம் பால் சொரிய பாரையெல் லாம் நெக்குருக கிஷ்டை. நேமம் யாவற்றையும் நிமிஷமே பறத் திடும் (கண்ணன்) துஷ்டர்களைத்தானடக்கி சிஷ்டர்களை யாதரித்து இஷ்டமூட்டும் எங்கள் கண்ணன் இனியனான ராயனேயன் (கண்ணன்.)

அடிபட்டாளேசம்மந்தி:— ஓடிவந்தானே கண்ணன்பாடி வந்தானே இங்கேயோடி வந்தானே நல்லபாடிவந்தானே (ஓடி) கந்தல் கிழிசலைத்தோளிலே போட்டு சுந்தரப்பாகையைத் தலையிலேமாட்டி நந்தகோபன் மகிழ்நவனீத ஹஸ்தன் எந்தைமாத வனின்பமேயூட்ட (ஓடி) தப்பட்டைமேளம் தாளங்கள்போட்டு செப்பிடமுடியா சிறுவரவரோடு ஒப்பிலா வோரொலி யெங்குமே பரவ முப்புரம் எரித்தான் யாவருமகிழ (ஓடி) கால்களை வந்து வீசியே போட்டு வேல்விகர் கண்ணால் ஜாடைகள் காட்டி மால்வர எங்கும் பெருங்கூட்டமே கூட்டி மேலுளவானோர் பூமழை கொட்ட (ஓடி) வீரமே நாட்டும் பொன் வரை மார்வன் மாரனினய்யன் மகிழ்தருமாயன் சாருரூபன் சந்த்ரப்ரதீபன் நாரணனுள்ளம் எந்நாளும் வாசன் (ஓடி)

வா வா வா வாடிப்பெண்ணே:— கண்ணன் வருகின்ற பொற்காட்சிக் கண்ணுக்கினியதோர் நற்காட்சி மண்டல விண்டல பாவையுமே மகிழ்வை எய்தன பாருங்கடி (கண்ணன்) தாமரைத்தாளில் இசைகுலுங்கச் சந்திரனெற்றியில்பொட்டிலங்க காமமே யூட்டும் கண்ணனவன் காட்சியளிப்பது என்னடியோ (கண்ணன்) தாமரைக்கையால் பொருள்விளக்கித்தரணியைக் காப்பதாய் மொழியளித்து கோமளவண்ணன் கோவிந்தன் குளிர்முகமதனை நன்கமைத்துக் (கண்ணன்) மார்பினவிடுலே பதைக்கமின்ன மதங்கொள் நடைசேர் யானையன்ன ஆர்வமாய் ஒலிகள் எங்கும் மின்ன அச்சுதமுராஹரி அருள் என்ன (கண்ணன்) புன்னகைமுகத்தில் தான்பூக்க புண்ணியசீலரைத்தான் காக்க இன்னிசைக்கீர்த்திகள் தான் தழைக்க எசோதை நந்தன் தானடக்க (கண்ணன்) ஆடிக்கொண்டுபுகழ்பாடிக்கொண்டு

அசைந்துகொண்டு அவன் குதித்துக்கொண்டு-தேடிக்கொண்டு நல்லசிரித்துக்கொண்டு தேனூர்மொழிகளைப்பிதற்றிக்கொண்டு கண்ணன்) பறவைகள் போலத்துள்ளவிட்டுப் பாங்காயிசையைக் கேட்கவிட்டு துறவிகள் மனதையும் கொள்ளையிட்டுச் சுந்தரப்பார்வையைப் பரவவிட்டுக் (கண்ணன்) பூரணசந்திரன் போன்றவனைப் புண்ணிய வடிவாயமைந்தவனை நாரணனுள்ளமே கொண்டவனை நாளுமே யெங்கும் நிறைந்தவனை (கண்ணன்)

பியாகு ஆதிசாப்பு:— கண்ணனென்னுமொரு நல்லமுத்துக் கைதனில் சிக்கியதேசித்து (1) பொன்முடியதன்மீது தோகை பொருந்திய மோகநிலைஜாதை (2) விண்ணிடைப் பெருஞ்ஜோதிநாண மேலானப்பொற்றிலகங்காண (3) கருணை பொழி சீர்விழியின் காட்சிக்கடலுலகம் எல்லாமே யாட்சி (4) கனிமொழி செம்பவளவாயன் கனகாங்கி தேவகியர் சேயன் (5) புலிநகம் முத்தாரம் தொங்கப் புண்ணியனென்னெதிரில் தங்க (6) கஞ்சமலர்கைகளை வளைத்துக் கனகமய இடைமருகில் வைத்து (7) அருள்பொழியானந்த நெஞ்சம் அனைவர்க்கும் அதுவாகும் தஞ்சம் (8) அடிமலர்க்கீதங்கள்பாட அனைவரும் கண்களித்தாட, (9)

மாற்றறியாதச்செழும்பசும்பொன்னே:— சொல்லற்கரிதானச்சுந்தரப்பொருளே ஜோதியேஎழில் சீர் சுகுணமாம்கடலே வெல்லற்கரிதான வீருளதிவீர வேகமா யென்னையேவிரைவினில் காவாய், பொல்லாரையடக்கியே நல்லாரையுயர்த்திடப் பொன்னெனத்தோன்றிய புண்ணியவடிவா, எல்லா ஐச்சுவர்யமும் ஏற்றதோர்நன்னிலையும் என்றுமேயருள்வாய் ஹ்ருஷிகேச ஹரியே (I) வேதத்தைத்தந்தோனே விரிபுகழ்கொண்டோனே விண்ணவர் நற்கோனே மேலானமாலே, நீதத்தையுலகினில் நேர்மையாய் விளம்ப நிமிஷ நிமிஷமே கோலமே பூண்டாய் க்ரோதத்தை நீக்கியேநற் குணந்தனைப்பெருக்காய் கோபால கோவிந்த கோபிகா வல்லவா, கேதத்தை நீக்கியே க்ருபைதனையளிப்பாய் க்ருஷ்ணனேமாதவ கேசவயென்னீச (2) காரணம் காரியம் யாவுமே யானவா கடல்மலை நீர் நிலம் விசும்பு

சேர்வடிவா, பூரணமேகல்லப்பொன்கதிர்மணியே புகலுவோர்க் கின்னருள் நாளுமேயருள்வாய், சீரான்நன்னிலைத் தினமுமே யீபவா ஸ்ரீதராமுராஹரிம்சங்காதிகேசவா, காரணனுசைகொளும் மூரனியினுத நாளுமே திருவருள் நல்கவே வா வா. (3)

ஆனந்தமானந்தமாயினே யம்ம :— ஆனந்தமானந்த மானேனே கண்ணு யருள் நிலயமதில் சேர்ந்தேனே- தேனூர் மொழி வெள்ளமெய்தன எங்கும் செஞ்சொற்கவி மழை பெய் தன (ஆனந்தம்) பாவபயமுற்றுந்தாமேயகன்றன வுளம் பரி சுத்த நிலைதனையடைந்தன- தேவவிசுவாசமெங்கும் நிறைந்தன என் சிந்தை மகிழ்தனையே கூர்ந்தன (ஆனந்தம்) கருணைசீர்ப் பார்வைதனைக்கொண்டேனே நான் கவலையை முற்றுமே விண் டேனே- சரணமலர் தொழுதிங்கே நின்றேனே ஐய மகிழ்சார்ந் த நன்னிலைபடைந்தேனே. (ஆனந்தம்)

மோகனம் ஆதிசாப்பு:— கண்ணனைக்கண்டேனே பின் றே நான் கவலையை விண்டேனே- வண்ணவாயின் குழலின்னி சை கொண்டேனே வாழ்வெல்லாமுயர்ந்திட வுற்று நானின்றே ன்.(கண்ணனே) சந்திரனிகர்த்ததேநெற்றி யதனோம் சம்பங்கி சுரி குழலுற்று- கந்த கஸ்தூரிப் பொட்டுக் காதம் கமழவிட்டு காட்கிளத்தனே யொருமிக்ககூட்டும் (கண்ணனே) இளந்தளி ரிணையடியே அவையிடம் இசையணி வேதத்தொனியே- களி னமுகக்கண்ணன் காரணனுல்லாசன் நாடுபவர்க்கெல்லாம் அருள் செய் விசுவாசன். (கண்ணனே)

கேதார கவுளம் ரூபகதாளம்;— சுதினமாச்சுதே என் தன் துன்பம் போச்சுதே எங்கள்பதியாம் பார்த்தசகனைப் பாடி யே நின்றதால் (சுதினம்) பூரணச்சந்திரன்போன்றதோர் மூக மும் அதில் பொலிந்திலங்குமோர் நல்ல திலகமும்-சீர்விழியத னற்பார்வையகமும் அதை செப்பச்செப்பமிசவே விரியும் (சுதினம்) அன்பினிலைக்கோர் மூலமாம் நெஞ்சமும், பொல்லா வரக்கர் குலம் யாவுமே யஞ்சும்பொன்னகருள்ளாராருமே கெ ஞ்சும் புண்ணியனமக்கோர்முற்றுமே தஞ்சம் (சுதினம்) கார்க்

கவே நாடுமோர்ப் பொன் மலரடியும் மனக்கவலைகளெல்லாமே யிகூஷணமுடியும்- பார்க்கப் பார்க்க இன்னவனடையும் பக்தகா ரணன் பரமானந்தக்கொடையும், (சுதினம்)

தெலுங்குக் கீர்த்தனைகளின் மெட்டு.

மனசு கருகதேமி:— அருள் மழையை யீயவாவா ஸ்ரீனி வாசனே ஹரி (அருள்) அருள் நிதியே துதிபதியே யானோர் மகிழ் தேவ (அருள்) அரண்யதட மோரானைமேவ, அதன் காலை முதலை கவ்வ, துரித நடையாக நேரே, துணைசெய் முரா ரே, கருணாகரனேகலியுகவரனே, விரைவேவா வாவிருப்பமீவாய் வேணுகாத துதி ராயனேயனே (அருள்)

மருகேலரா ஓ ராகவா:— முரளி தரா நேராகவா முர ளிதரா- இரவுபகலாக நின்னிசையைக்கேட்க இதுவேவேலையாய் நாடி நின்றேனே (முரளிதரா) வெண்ணை பால் தயிர் கிண் ணமுட்ட ஈவேன் வேணு காதனே நன்றுயூதடா- பண்ணிசை காரணன் கீதநற்றுனியே பன்னக சயனுப் பரமகல்யாணு. (முரளிதரா)

நினருன்சினேனே:--- நினைநம்பினேனே ஸ்ரீதரனே நினை நம்பினேனே நிஜமாக நானும் க்ஷேமமாய் (நினை) கனகமய கரு டாரூடா கருணாகரா ஸ்ரீ ஸ்ரீனிவாசனே (நினை) உலகதனில் நீ யே யெனக்கு வுற்றதாய்தந்தை யாவருமே- கலியை ஐ ஐதீர்த் தருள் கானலோல ஸ்ரீ நாரணனிசையின் மூல (நினை)

என்த நேர்ச்சின;— என்னவேண்டியெ னேது பலன் காணேன் இந்திரோசமணு இதுவுன்னருளோ (என்ன) சொன்ன தாம் வார்த்தைகள் உரையாகலையோ துணையையே நீ நல்குவாய் மெய்ய (என்ன) மனந்தான் பாறையோ மற்றது ஏதுவோ மாய மாம் வித்தை யேதுமறியேன்- இனமாக வந்து எனைக்காத் தருள்வாய் இசை நாரணனிசைமூலனே (என்ன)

ப்ராண நாத வீரா:— கள்ளத்தனமே செய்யவே செய்

யேல் நீ [கள்ளத்தனமே] மெள்ள மெள்ளநீ இநகர்ந்தூர்ந்து வந்து விஷமாம் செயல்கள் செய்யவே நாடிக் (கள்ளத்தனமே) ஒருமுறை சொன்னாலதுபோதாதோடா பெருமையல்லவே ப்ரீதியாய்க்கேளாய்- தாணியிலிது சரியாகாதேடா நாரண னிசை மலராக்கண்ண (கள்ளத்தனமே).

ஆடமோடி கலதே:— ஓடிவாட அய்ய மெய்ய ஓடிவாட அய்ய ஓடியே நீ வா வா யுல்லாசமாயோடி நாடிடும் வெண்ணெ யை நாளுமே யீகுவேன் (ஓடிவாட) சங்கு மத்தளம் தாள வரிசை யிவையாவும் கூடே மங்களஸ்ரீ விக்ரஹ மன்மதஜனக மகிழ்ராயனன்னேசா மகிழ்வுடன் கூடி (ஓடிவாட.)

ப்ரோவசமயமீதோராமய்ய:— சீராய் வருவாய் தேவனே ரங்கனே சிந்தை மகிழ யாவுமீவோனே (சீராய்) பார்த்துப் பார்த்து நீ பதட்டமாவ தேனோ பன்னகசயனாபரிமளதேகனே (சீராய்) மாதவக்கண்ணா மணிமய அங்கனே யாதவகுல அச்சு தானந்தா-ஜோதியே யுன்னைத்தொழுவேனே மெய்யாய் நீத நாரணன் நேசகன்னேயனே, (சீராய்)

என்தபாக்கியமு:— என்ன புண்ணியம் மாதவசெய்தே னோ எதிர்பாராதல் லின்பமெய்தினேன் (என்ன) முன்னானி லுள்ளவர் செய்ததாம் செய்கையே மோகனகண்ண வுன்தய வானது (என்ன) மனம்பொறி யாவும் தம் தம் நிலை நீங்கி மாத வரின்பால் வசமானதே-வனமாலைமார்வ வாசுகிதேவா மகிழ் ராயனேய இதேகாட்சி யீவாய். (என்ன)

க்ருபஜூடகு:— தயவீவாயிதுவேளை தமியேனிடமேநாடி (தயவீவாய்) அய்யனே மெய்யனே அருமறை தூயனே (தய வீவாய்) அடியாரைக்காத்தருள் அருளானதன்றோ ஹரியே நீயேயறிவாய்-தடவரையதனால் பசுவெல்லாமும் காத்தாய் தாணிபுகழும் ராயனினேயனே (தயவீவாய்)

சாணூரகிமோகமு:— போதுமேடா வுன்தனாட்டம் கண் ணனே நீ வா-போதுப்போதா யென்னை வருத்திப்புலம்பிடவே

வ்வித்திடுருய் (போதுமேடா) உருக்கு நன்னெய் பெருக்கி விட்டு ஊட்டுவேன் வாடா திரும்பித் திரும்பி யென்ன ஆட்டம் சிராய் கோராய் ஓடி வா வா(போதுமேடா)ஆடைத்தயிர் அள்ளி யள்ளி யீகுவேனீவா பாடிப்பாடி ராயனேய பரிந்து வுன்னேயே மகிழ்ந்து வேண்டுறேன் (பேதுமேடா)

சுகுணமுலே செப்புகொண்டி:— உன்னேயல்லா லொரு துணையை யுலகிலேதுமறியனே (உன்னே) பன்னகாரிவாகனனே ஸ்ரீ பரந்தாம ஓடியருள்செய் (உன்னே) பாபமான வழியில் சென்றும் பரிதவிக்கும் ஏழையிவனே–பூபதி ஸ்ரீகண்ணனே நீ போதில் வந்து காத்தருள்வாய் (உன்னே.)

சரசசாமதான:— சரசமாடுவேனோ யிதுவல்லக்கண்ணு தயையாகநான் சாற்றினேனிங்கே (சரச) விரசமாகியே வீண் டம் செய்யேல வேணுகானனே கேளாயென்னேயே (சரச) இதமாம் வார்த்தைதகளென்னனென்னமோ யீந்தேன் எள்ளள வும் நீ யிணங்கவேயில்லை-பதிவாகவுன்னேத் தூணிலே கட்டிப் பார்க்கிறேன் வாடா ராயனன்னேயா (சரச)

ராமநீசமான:— தேவனே யென்னேக்காக்க வா எது வம்சோதாரக (தேவனே) மூவா முதல்வா ஸ்ரீஹரீ நீ, நீ, நீ மூவுலகோதிடும் மோகன வுய்யாரா (தேவனே) படித்துப்படித் துனக்கே நான் பலமுறையாக நேரில்—எடுத்துரைகளாடியும் இன்னும் தாமசமேன் ஈசாராயனேசா பக்தர்விசுவாச(தேவனே)

தொலிநேசேசின:— கையிலேவெண்ணேயைத்திருடியே கொண்டு கண்ணனவனதோ ஓடுறான் பாரீர்-மெய்யாயோடி விரைவினில் நாடி விருவிரென்வே தூணிலே யீர்ப்போம் (கை யிலே) ஒருநாளிருநாள் தயையுடன் விட்டால் உறுதியாய்க் கொண்டிதை பாடமாய்க்கற்றான் திருடனிவனேத் தெருக்கா லில் கட்டி சிறுவர் நகைத்திடச் செய்குவோம் வாரீர்(கையிலே)

என்னடு தயவொச்சுநோ:— என்றுன்னருள் வருமோ யெதுகுலதிலகா குன்றினை யேந்தியே கோவெலாம் கார்த்த

வனே (என்று) அத்தியமைழத்தும் அகஷணமேகிறாய் பக்த பிரக்லாதனை பரிவுடன் மேவினாய் சித்திரப்பாவை மகிழச்சேலை யீந்தாய் உற்ற காரணனை புவந்த நற்சிலா (என்று)

ரகுநாயக!— இதுவேளையே யென்னையாள்ப்பே பெது நாதனே யின்பமீவாயே (இதுவேளையே) பதிதபாவன பாப மோசன பன்னகாரிரூடா பாலனம் செய்யவா (இதுவேளையே) பொருளாசையாலே புயல்வண்ணர்கேளாய் புண்ணுமேனனைய புவியிதன்மேல்-திருவருளாலே யேழை யென்னை நோக்கி திவ்ய ராயனேய செம்மை புரிவா (இதுவேளையே)

ரகுவர நன்ன மரவகத்தருனு?;— விரைவிலே வா வா வேணுநாத (விரைவிலே) திரைகடலலைமீது அரவமணையவ (விரைவிலே) உள்தார வுன்னையே உண்மையாய் நம்பினேன் வளங்கவிராயனின் மகிழிசை தேவா (விரைவிலே.)

கலிலோ ஹரி;— ஹரியே யுனையலால் மறுதுணையையே அறியேன் மகிழ்கொள் ஸ்ரீ (ஹரியே) வரமீவா யெளியே னிடமே நாடி மஹிதலமுழுமையும் அருள் மழை பெய்தருள் (ஹரியே) ஆகா முறையான வழிகளில் ஆசையைப்புகுவித்து சோகமே யெனை நிழலென நாடச் சுகமெலாம் விடுத்தேன் ஏகாக்ஷரப்பொருளே ஸ்ரீ ஹரியே எளியேனைக் கார்த்தருள் ராயனினேய ஸ்ரீ (ஹரியே)

நீது சரணமுலே:— நீத நினதடியை சேர்துணையென் நிதமுமேநம்பினேன் ஐய (நீத) வேதவேதாந்தபொருளே ஸ்ரீ வேணுநாத விரைவே வா வா (நீத) பாபகர்மம் யாவும் நீக்கி பாலனமே செய்தருள் நீ-பூபதி ஸ்ரீ வாசுதேவ புகழ்ராய னிசை நற்காரணனே (நீத)

எப்புடு க்ருபர் கல்குனோ:— எப்பொழுதுன்னருளா மோர் எதுகுலதிலகா ஆ ஆ (எப்பொழுது) எப்பொழுதாயி னின்தன் எழிலுறும் பார்வை போதும் ஹ்ருஷிகேசபத்மனாபா இதனை நல்குவாயே (எப்பொழுது) தந்தை தாயும் நீயே

தன்னருள் தெய்வமும் நீயே சிந்தனைகளைந்து நான் சிந்தை மகிழ்கின்றேன்-மந்தஹாசவதனா மாதவாஞ்சனா நந்தலக்ஷ்மீரமணா நாரணனன்னேயா (எப்பொழுது)

ஸ்ரீரகுவரசுகுணாலய:— ஸ்ரீதர எனையாளவா தேவ ஸ்ரீதர எனையாளவா பரமகல்யாணா ஸ்ரீ பூரமணா (ஸ்ரீதர)வேதத்தின் ஒலியே நீதத்தின் நிலையே ஆதியதன் மூலா யானந்த மகிழ் லீலா (ஸ்ரீதர) பாரினிலாரோ கார்ப்பவர்கூறேன நாரணனன்னேச நாளருள்தாதா (ஸ்ரீதர)

நின்னசெப்பக ரணமேமி மனசா:— என்ன சொல்லியும் குணமே யில்லையே யேதடா இந்த சோதனை யிது (என்ன) வனமாலைமார்வ வாரிதிவாச மதியாதெனை சோக வைத்தனை [என்ன] கலியுகமூர்த்தி கவலைகளைத்தீர்த்து கருணையை நாள் தந்தருள்வாய்நீ—பலமுறையாகப் பரிந்தாடுறேனே பக்தநாரணன் இன்னிசையின் மூலா (என்ன)

மாகேலரா விசாரமு:— எனக்கேதய்ய விசாரமும் இசைதுணை நீ இனிதாகிருக்க (எனக்) மனக்கவலை யேதுவரினும் மகிழ்வாகவே சஹித்திடுவேனான் (எனக்) எண்ணில் இன்னல்கள் ஏதுவரினும் இனிதே யாகும் நாதனே கேளாய்-புண்யனேகண்ணா புயல்மேகவண்ணா புகழ்நாயனேய கொடுத்தருள்துயை (எனக்)

பராக்கு நீ கேலரஸ்வாமி நீ:— பராக்குனக் கேதைய தேவனே (பராக்கு) தாரதாம் வழியையே காட்டில் ஜகமதில் நானுய்ய வழியேதுமில்லையே (பராக்கு) அந்நாளிலானையை யாதரித்ததேவனே அணங்கையின் மானம் அக்ஷணமேகாத்தய இந்நாளிலே யென்னையேனோபாராய் ஹ்ருஷிகேச ஹரியேஸ்ரீநாயனின் நேயனே (பராக்கு)

அநாதடனுகாது:— அநாதனென்னைப்பாராய்ஐய்யனே (அநாதன்) சநாதனநல்வழியினை மறந்து ஜகமதில் கடையனாய்

வாழ்வையே நாடும் (அனுதன்) நிராதாவதனையேகாட்டி நீள் வேதனையதையாக்கேல்-விராடளே விஞ்ஞாபித்தே னுன்னிடம் விரைந்தோடியருள் செய் ராயனின் நேயனே (அனுதன்)

சாமஜவரகமனு:— தாமசராஜரஹித சத்வமானகுணபூரித ஜகத் பால அதிலீல மகிழ்சீல ஸ்ரீ ஹரியே (தாமச) கோமள வடிவா மகிழ்வாகவே கோபியவர் தங்களுடன் கூடிவிளையாடு நல்ல நேமமாாவுமுள்ளவ (தாமச) பூததயா பூரணசம்பூரண போதிலோடி நாடியருள்வாய்-யாதவகுலதிலக துதியழக நாத ஸ்ரீ ரமணனே நாரணசுகிதனே த்வேஷ ரஹிதா (தாமச)

சரசரசமரையிக:— நல்ல நல்ல வெண்ணெயை யிதோ யிருவேன் ஹரி வா முராஹரி தேவ (நல்ல நல்ல) சொல்லச்சொல் என்னையே மீளவே கூவி நீ கரணங்கள் கிழிய யோசையை யிடுகிறாய் (நல்ல) உன்னைச்சொல்ல நீதமோ என்னையே நாணுகிறேன் கனிமொழியதனோடு சுடுமொழி யீவனேல்-இனமாகக் கேட்பாயே ஹ்ருஷிகேச கோவிந்த மனமுரண்டாடாதே மகிழ் ராயனேய (நல்ல)

சின்ன நாடென சேபெட்டித்திவி:— சின்னக்ருஷ்ண நின் சேதி ஏதடா (சின்னக்ருஷ்ணன்) என்னடாவேலையுரியினருகாக இவ்விடமே நீ எடுத்துரைப்பாயே (சின்ன) இந்நவேளையில் நடுநிசியிலேஏதடாயிங்கேகண்ணனேயுள்ளாய்-சுந்தராவுன் தன் குணமது நேரா சுகுணநாரணன் சுவைநற்கனியே (சின்ன)

அலகலல்லாட:— அரவணன்னடம் செய்யும் மாதவ ஸ்ரீ ஹரி ஆள்கொண்டருள்வாயெனையே-திருவடி மலரைச்சிக்கெனப்பிடித்தேனுன் க்ஷீரசாகரசயன தேவாதி தேவ (அரவ) தெரியாத தன்மையால் செய்நதாமென் பிழை தாணியிலென்னையே க்ஷமித்தருள்வாய்-சுருதிப்பொன் வடிவா சோதிநன் மணியே வரநாரணனிசை மகிழ் பொன்னணியே. (அரவ)

ஏமிநேரமு:— என்ன தாமசம் என்னைக்கார்த்திடவே என்ன தாமசம்—இன்னுமா யோசனை யேழையின் மீது ஹ்ருஷி

கேசஸ்ரீ கோவிந்தனே (என்ன தாமசம்) உன்னையல்லால்நான் மற்றுரையுமுடேன் உண்மையிதுவே உரகசயன ஆ-இன்னிசை நாயன் மகிழ் நன்னேச இலக்குமி தேவா ரஞ்சிதஹரி(என்ன தாமசம்)

துளசி பில்வா:— துளசி தாமன் துணையையே நல்லிச் சுகமெலாம் அருள்வான் (துளசி) களைப்பையே கொள்ளாதே களிப்புடனேயிரு கவலையதனைத் தீர்த்தெமைக்காப்போன் கருமுகிலோன் கழல் பணிகுவம் நாளும் (துளசி) வனத்திலே குளத்திலே மலரினைக் கொய்ய மதக்கரிமகரியால் வேதனையாகி யினமாயாதிமூல மேநீகாவென க்ஷணமே யருள் செய் நாரா ணன்மகிழ் லீலன் (துளசி)

கனிகாமுன்சி:— அருள்தர வாவா தேவகி பாலா ஹரியே யின்னமும் தாமசமேனோ (அருள்) கருமுகில் போன்றாய் கருணையை நல்காய் பெருமையைக் கொள்ளேல் பித்தனென் னைநாடி (அருள்) அருள் நிலைவடிவா அருமறை முடிவா அக தியே யாக்கல் அருள்தானுமாமோ-விரைவிலே தேவா விரும்பி யே யேவாய் மேலானாயனின் இன்னிசை மூலா (அருள்)

மருவேற திக்கெவரைய்யராம:— மகிழ்தருவாய்வேணு கானலோல மலரடியினை நாளும் போற்றுவேன் (மகிழ்) அகி லாண்டமுமே யருள்செய்வோனே யாதரித்தருள் அடியேனு னுய்ய (மகிழ்) அலைவாயிடைப் பொருள்போலே நானே ஆசையாலே காணேடிபுழன்றேன்-நிலமாமகள் நித்ய லோல னே நீடிசை ராயன் மகிழ் சீலனே (மகிழ்)

பியாகடை சாப்பு:— இதற்கோ நானழைத்தேன் எடுஎடு வுன்கையை இதிலேது பாவில்லையே (இதற்கோ) எதிர்த்து நீ முரண்டிடில் என்னிடம் அடியுண்பாய் இன்னலைச் செய்யாதே என் சொல்லைத்தள்ளாதே (இதற்கோ) கொடுக்கக் கொடுக்க ஆசை குறையவே காணேனே கொடுமை கொடுமையிது கூற வேயாகா-அடுத்த வீடுள்ள வவர்களை நீ பாராய் அடம் செய் யேல் ராயனேய அம்புஜ மலர் நாபு (இதற்கோ)

சனிதோடி ராவே:— இனிதோடிவாராய ஸ்ரீனிவாச ஹரியே (இ) அநுபல்லவி: கனியால் வெண்ணை தயிர் கனி வாக தருவேன் காக்கவே வையாதே பார்த்தருளிது கோம் (இனி) எந்த வேளையும் நின்தன் இசையுறு நன்னமம் இனமுடனே பாட இசைதுணை யீவாய்—செந்தமிழ் ராயனின் சிதரா கேசவா! தீவிரமாகியே மேன்மையை யருளிட (இனி)

கமலாம்பன:— தாமரைக்கண்ணா சியாமளவண்ண தயை ஈந்துநீ யாண்டருள் நன்னு (தாமரை) பாமரனென்றென்னைப் பாமுகம் செய்யேல் பதமலரை யாவியணைந்தேன் (தாமரை) என்னையல்லால் புகல் சர்வத்வமுமேனு, இஃதுணர்ந்து இன மாய் நடவாய்—பன்னகசயனு பங்கஜநயனு பக்தனாரணன் பார்த்திமூலா (தாமரை)

சுஜனஜீவன:— விரைவாய்ப்பார்க்கவா தேவா விரும்பிச் சேர்க்கவா (தேவா) அருளெல்லாமுமே கூட அழகாகவேவா ஆரண்யந்தனில் யானை கூவவே அன்பா யாண்டவா (தேவா) பாரெலாமே துதிகள் கொள்ளும் பரமபரவனு, யாரையுமே யுன்னையல்லால் அடிவணங்கேனே, நோயென்னை நீ சீராயாண் டிட பாரய்யசீலா தாரய்ய கையை பக்தராயன் சீர் (தேவா)

சக்கனிராஜ:— நல்லதோர் மார்க்கம் நம்முனுளவாக நாட வும் ஆமோ நுடிகிடங்குப்புதர் (நல்ல) மல்லிகைவண்ரோஜ வன மருகில காண, மகிழ்வநூா வாண சித்திரப்பூவைக்கண்டு (நல்ல கங்கையி னன்னீர் கைதனிலுளவாக கவர்வரோ கடல்நீரை கால்கோக ஏகி—மங்களஸ்ரீரங்கன் மாதவனிருக்க மறுதெய்வம் தொழுவரோ (நல்ல)

நீனும ரூபமுலகு:— தேவாதி தேவனடிக்கு மங்களம் ஜெயமங்களம் (சரணங்கள்) மூவாத செல்வமீயும் முகுந்தன வன் பொன்னடிக்கு (மங்களம்) சீரான சுகமுனிவர் இனமுமே போற்றடிக்கு (மங்களம்) மோஹன வடிவமான ஸ்ரீஹரியின்

திருவடிக்கு (மங்களம்) காரணன் தன்னுள்ள மகிழும் நளின முகஹரியடிக்கு (மங்களம்)

ஆரணர் திருமகனே:— உலகோர்புகழ்துரையே உயர்மர மலை நிதியே நிலமோரடியதனை அளவாய்க் கொளுருவே எல்லா (உலகோர்) அரவப்பணியாளுதியா அடியைத்தொழும்பெருமை தரு— மகிழ்பொற்புய சிற்சுக தற்பரனே வாவா— குணவப்படி யுற்றருள் நற்றருவே வாவா சார்பால் துணையாய் நிற்பவனே வாவா— அருள் (உலகோ)

ஓரடிப்பதம் சயித்தலக ஆ! ஆ!:- கட்டித்தயிர் ஆ! ஆ! கொட்டித்தாறேன் வா வா, கண்ணாயிங்கே வா வா, வெண்ணெயுண்க வா வா, விரைவிலிங்கே வா வா, வேணுகானு வா வா, முத்த மீய வா வா, முத்தம் பெற வா வா, எத்து இல்லை வா வா, நிச்சயமே வா வா, உத்தமனே வா வா, உய்யாரனே வா வா, இத் தருணம் வா வா, எல்லாம் பெற வா வா:

கமபோதிராகம் ஆதி தாளம்:—காட்சி கண்காட்சியே கண்ணனைக்காண்பதானக் காட்சி கண்காட்சியே— மாட்சிதரும் ஆட்சிதனை மாநிலத்தில் தானளிக்கும் (காட்சி) பால்கடல் தன்னிலொரு ஆலிலையைக்கண்டுப் பாங்காக பத்மநாபன் அதனிடமே சென்றுக் கோலாலமாக அதில் குணமுடனே சாய்ந்து, கோபிமார் யாவரும் கொண்டாடவே உவந்து—பொன்ரத்ன மணிககால்தனையே வளைத்துத் தன்னதாமணி வாயிடை யமைத்து மனம் கொள்ளை கொள்ளும் இன்பமெல்லாம் வயித்துக் கதிர்மய நகைகளை ஓர் புறம் சரித்துத் துதிவானவர் யாவரும் மகிழ்வுடன் சூழ, தீனரக்ஷகன் ஹரி திருவருள் ஈவதோர்க் (காட்சி) தேவகிவசுதேவர் உளமகிழ்சேயன்; தேவர்களெல்லோருக்கும் அனுகுலநேயன், மேவிய எவருக்கும் அருள்தருபாயன், மேலான அர்ஜுனர்க்குப் பெரிய சஹாயன்— பொன் புள்ளி மயில் தோகை முடிசூட்டி, ஜில்புனுகுடனே கஸ்தூரியைத் தீட்டி. வெள்ளமான இன்பமூட்டும் வேணுகானம் காட்டி, விந்தைபல எங்குமெழச்செய்கைகளைக் காட்டப் பெரும்

பாரிலுள்ளோர் கூடிப் பதிங்களைத்தாம்பாடி பரசிவ அபஞா வாழ்த்துகள் படிக்கும் (காட்சி) அன்ஞெருநாளிலே அலைகடல் கடைய, அமுதெனும் பொருளதை யங்கவரடைய, முன்னெ வருண்பதெனத் தர்க்கங்கள்விளைய, மூரண்டிட அசுரர்கள்முகுந் தனும் நடுவாய்-எழில் சித்திரத்திலமைந்ததாம் பதுமை. போல் சிற்றிடையள்ளாக வந்த புதுமை, புவியெத்திசையும் ஆர்க்குமிவர் அருமை, போற்றிடவே நமக்கிதோர் பெருமை— துதிமோக வலையை வீசி மூர்க்கரையேமாற்றி வேகமுடனே காத்தராய னே யனியும் (காட்சி)

சங்கதியிதுதானே மங்கை சுலோசனையே:— வா வா வா தேவா என்னைக்காக்க வா வா வா தேவா (சரணங்கள்) மாவலி யிடமே மூவடி வேண்டிய, வாமன மாதவா வா வா வா மூவருள் முதல்வா மூவாத செல்வா, மோகன வுய்யார வா வா வா— தேவாதி தேவ திருமருமார்வா தீவிரமிங்குநீ வா வா வா, பாவவினைகள் தீர்த்து பக்தியை யளிக்கும் பாவன மூர்த்தியே வா வா வா [1] பூவே மணமே பொருந்திய குணமே புண்ணிய சீலா வா வா வா மேவினோர்க்கின்னருள் என்றுமே நல்கிடும் மேகநேர் வண்ணா வா வா வா- ஆவினுக்குறுதுணை யாருதானு ளரோ அச்சுதக்ருஷ்ணனே வாவாவா நாவினுக்கினிய நாமமாம் சுவையை நாளுமே யீந்திட வா வா வா [2] அத்தியை காத்தாய் ஆடையைக்குவித்தாய் ஹரி ஹரி க்ருஷ்ணா வா வா வா பக்தியை யளித்தாய்ப் பண்ணிசையளித்தாய் பார்புகழென்னையே வா வா வா- தித்திக்கும் கரும்பே தெவிட்டாத விருந்தே த்யானமே யீந்திட வா வா வா சித்தம்தனிலென்றும் செம்மையாய் வீற்று திருவருளதனைத் தீவிரமீவாய் [3] பாரினிலாரோ பாலிப்பார். கேளாய் பரந்தாமக்கண்ணனே யென்னிடம் ஓதாய், சாரதத்துவ மாம்பொன்னடிமலரை சதாவும்த்யானிக்க அருள்தா தாமாரியதனல் சேர்ந்ததோரிடரை மலைதனை யேந்தி வேகமாய்த்தடுத்தாய், காரணனிசை மலர் நாளுமே யணிடவா நல்லவா யென்னை நாடியே பாராய் (4)

எது குலகாம்போதி த்ரிபுடை: என் தசக்கனி வாடே:— என்ன சுந்தரமம்மா நந்தகோபாலசாமி எங்குமே காணேனே யிந்தனையழகு— இன்னிசைக்குழலூதி யின்பமே நல்கிடும் ரங்கேசன் மாதவன் ரமணீ மனோஹரான் (என்ன) பூரணச்சந்திர பிம்பம் பொழியுனலின்பம், பூமியில் வேறேது பொன்னுன காட்சி— பேர்தனை யோதினாலும் பிறரோதக்கேட்டாலும் பேரருளைத் தாலும் தானாகக்கூடிடும்(என்ன)செம்பவளமும் நாணும் செவ்விய திருவாயும், சிங்காரப்புன்சிரிப்பும் செகமெல்லாமகிழும்— அம்புவிதனிலிந்த அருமை பொருள் தனக்கிடு ஆரணங்கையே யெங்கும் அரிதரிதே பாராய் (என்ன) கமலமே வெள்கிடும் கண்மலரிணைரண்டும், கருணையை நல்கிடும் கடலிலெங்கும்— விமலமாம் முகமதில் விண்ணொளிர் நற்பொட்டும வில்லினைப் பழித்ததே மேலான புருவம் (என்ன) பொன்னிகர் வண்டு போல சுரிகுழல் தன் வனப்பும் புகழ் ஜாதி வண்ரோஜா மலர் வகை யமைப்பும்- இன்னிசை நாரணன் உளத்திலே விளையாடும் ஹ்ருஷிகேசன் கோவிந்தன் திருநாமமழைப்பும் (என்ன

க்ருஷ்ணன்செய்த லீலை:— ஆவணிக்ருஷ்ணபக்ஷம் கோபிமாரே நல்ல அஷ்டமி நடுநிசி கோபிமாரே- தேவகி வயிற்றிலே கோபிமாரே நம்ம செல்வக்ருஷ்ணன் ஜனனமே கோபிமாரே காவலில் பிறந்தானேடி—அவன் காந்தோடி வளர்ந்தானே- பால் கொடுக்க வந்தவளை—மனம் பதைபதைக்கச்செய்து விட்டான்- நீலமேக வண்ணனடி-பொல்லா நிட்டூரங்கள் புரிகிறான்—பொந்திலே அவன் கையே—அம்மம்மா பூச்சித்தேளை பூவிட்டான்— தொந்திரவு பொறுக்கலே—நாம் சொல்லச் சொல்ல அதிகமே பாத்திரங்களுருட்டுறான்- என்னைப்படுத்தியே வருத்துறான்— நேத்திரங்கள் பொத்துகிறான்- இது நேர்மையோ வந்துசொல்லீர்- வெண்ணை கள்ளனானேடி என்தன் ,மேலெல்லாமுமிழ்கிறான்- சோவிக்களச்சிக்காயை-பற்றித்தூக்கியே செல்றிடுறான் ஆவியணைகிறானே—பலஹாசியமேசெய்திடுகிறான்— தூங்கிவரும் குழந்தையை- அவன்தொடையைக் கிள்ளியோடுறானே— மாங்காயொன்று வைத்திருந்தேன்- தட்டிவலியக்கொண்டு ஓடிவிட்

18/104

டான்-; பாதைகளைமறைக்கிறான், என்தன்பாவாடையையிழுக்கிறான்-சாதுபோலநிற்கிறானே-இதுஜாலமேவந்துகாணும்.கன்றுகளை விரட்டுறான்- மனம் கலங்கிடவே செய்திடுறான், குன்றுகளைத் தூக்குகிறான்- அதைக் கூசாமல் ஒங்குகிறான், . நாயைப்போலக் குலைக்கிறான்- தெரு நாய்களையே திரட்டுறான்- பேயாட்டம் ஆடுகிறான்- வெறும் பித்தாக்கிவைக்கிறானே, குதிரைகொடுக்கிறானே- க்ஷணம் குப்புறவே வீழ்த்துகிறான்- இது வந்து நல்லதோடி- இவனிடும்பிற்கே யெல்லை யில்லை, பெண்வேடம் பூணுகிறான்- புத்தி பேதமாக்கிவிடுகிறான், கண் காட்சியத்தனையும்- அவன் கனப்போதில் தருகிறான்- ஆவேசம் கொண்டிடுவான்- எம்மை யடித்துப்புடைத்திடுவான்- தேவேசன் தானெனவே- இவன் தான் செய்யும் வேலை என்னவடி, நீதிபல மொழிகுவான்- மகிழ் நிர்த்தனமே செய்குவானே- சேதியேதும்தெரியலையே- புகழ் சீரான கோலனடி. சிங்காரூபனடி- இவன் ஸ்ரீ க்ருஷ்ண மூர்த்தியடி- மங்கையர் லீலனடி- துதி மகழிசை ராயனேயன்.

[ஆனந்த பைரவி ஆதிதாளம்.]:— ஸ்ரீனிவாசா யென்னையாண்டருள் தேவாதி தேவ திருவடியான மீந்தருள்- வானவர் பொற்கோனே மகிழிசைப்பெருமானே மதமத்சரியம் நீக்கி மனமே யுன்னிடம் நாட்டு. (ஸ்ரீனிவாசா) அனுதினமும் அநேக ரோகங்கள் என்னைச்சாடி யலைத்துப்பிடித்தாட்டுதே- தனுவிலே பலம்இல்லை தளர்ச்சியையானடைந்தேன் தாமோதரா ஹரி தயை தந்தருள்வாயே (ஸ்ரீனிவாசா) தந்தை தாய் சற்குருயாருமே நீ என்மனதின் சஞ்சலம் தீர்த்தருள்வாயே- செந்தமிழ் ராயனின் மனோஹரதேவனே தீவிரம் ஓடியே திருவருள் பொழிவாயே. (ஸ்ரீனிவாச)

[வாருமையா நலுங்குக்கு] :— கண்ணனுமமே மதுரமம்மா அதை கனிவாய் கேட்குது அதரமம்மா நல்ல புண்ணிய தவத்தால் வந்ததோர் பாக்கியம் புயல் வண்ணனிவன் சீர்கதைபே [1] முடி மீததனில் மயில் தோகைக் கள்ள மோகங்களுக்கெல்லாம் தனி ஜாகை நரம்படிமிசையிவன்தன் மேனியைப் பார்த்தால் பாசுகம் அருளும் கேட்டிடுவாய், [2] முகமோசச்

திர மண்டலமே தவ முனிவருக்கெல்லாமே பெரும் தனமே நாளும் வகை தொகையில்லாமல் வாரியே தந்திடும் வள்ளலாம் பொற்கண்ணன் பாரம்மா. [3] கஸ்தூரி திலகம் நெற்றியிடை திசை கமழவேவீசிடும் சுற்றிலுமே மகிழ் சித்சஜனய்யனும் சின்மயரூபன் ஸ்ரீதரன் லக்ஷ்மி மனோஹரனே. [4] கருணைபொழியும் திருக்கண்கள் அவைக்கருது முன் போக்கிடும் இடுக்கண்கள் அவன் உரிமையாய் அமுதினை உண்டு களித்தங்கு உற்றதோர் அன்னையை பார்த்த கண்கள். [5] பவள வாயைப்பாரடியோ அவன் பகவத்கீதையைக் கேளடியோ நம்தம் கவலைகள் தீர்த்திடும் களிப்புகள் கூடிடும் கனிவாயின்னிசை நாதமடீ. [6] அசுரரை வென்றிடும் நீள் கரமே அது அடியவர்க்கென்றும் நலம் தருமே எல்லாத்திசைகளும் ஆர்த்திட மலைதனையேந்திச் செம்மையை நாளும் செய்பவனே [7] அன்பின் பெருக்கே யவனெஞ்சம் நம்மனைவருக்கும் வந்து அவன் தஞ்சம் துகிலின் மலனித்தியன் நெடுமால்மாதவன் நேர்மையை அளிக்கும் பொற்கண்ணன், [8] நாபியில் பூத்தது ஓர் கமலம் அங்கு நான்முகன் உதித்தது ஓர்விவரம் வல்லகோபியர் பல்லோர் இடையிடைக் குழுமிக்கூத்துகள் இட்டத்தனிவடிவன் [9] காலிலே யிசையணி பொற்சதங்கை நகக்கண்ணிலே ஆ ஆ வான் கங்கை ஆதி மூலமிவன்காண் மூவருள் முதல்வன் முக்தியளிக்கும் ஸ்ரீ ஹரியாம் (கண்ணன்)

செஞ்சுருட்டி ஏகதாளம்:— க்ருஷ்ணன்செய்த துஷ்டத்தனத்தைக் கேளடி யெசோதையே திட்டிக்கதவின்வழியே வந்து கட்டித்தயிர் வெண்ணை யுண்க எட்டியேரடிப்பிடித்திடவும் கையைத்திருக்கி 'யென்னையடித்துக் கீழே தள்ளி ஓடிவிட்டான் (க்ருஷ்ணன்) மெதுவாயேகும் பூனைபோல மேகவண்ணன் வீடடைந்து கதவினண்டைத் தான் பதுங்கிக் கவனமாக இருந்து கொண்டான் கதவைக் கொஞ்சம் தொட்டிடவும் கதறிவிட்டான் மனம் பதற விட்டான் பெரிய பெரிய கூத்து போட்டான் (க்ருஷ்ணன்) கேட்டியோடி பின்னிகழ்ந்த கேசவனார் சிகதையை வீட்டிலுள்ள முருக்குச் சீடை வெண்ணை பாலாம்

கட்டியாடை ஒட்டமாகிக் கொணர்ந்து ஈய மற்றமுராண்டி மூற்
றும தாவும் வாரி வாரித் தின்று கொண்டு வாயில் வாராப்
பேச்சளித்தான் (க்ருஷ்ணன்) கண்ணே யென்னை முற்றும கே
ளாய் காதுக்கினிய ஓர் கதையே கண்ணாமூச்சி நாங்கள் பொத்
தி களிப்படையும வேளையிலே கண்ணான வுன் மகன் தான்
கலந்து எம்மைச் சூழ்ந்து கொண்டு பற்றியெம்மைத் தொட்
டிழுத்து இல்லாததோர்க் கேலி செய்தான் (க்ருஷ்ணன்)

சவ்ராஷ்ரம் ரூபகம்:—கண்ணன் கண்ணனென்றால் கவலைகள்
நீங்கிடும் கண்ணனை நினை மனமே-நல்லபுண்ணியம் சேர்ந்திடும்
புகழிசைக் கூடிடும் புய்ல் வண்ணன். அவனாமமே (கண்ணன்)
எந்நேரமானாலும் எவ்வேளையானாலும் ஈசனை நினை மனமே—அவ
னின்பமே தல்கியே இடைஞ்சலை தவிர்ப்பானே ஹ்ருஷிகேசன்
மாதவனே ,(கண்ணன்) என்னத்தைச் செய்தாலும் என்னத்
தைப் பார்த்தாலும் ரங்கனை நினைமனமே—துதி சன்மார்க்க
மீந்தெம்மை சந்தோஷ மீகுவன் தாமோதரக் கண்ணனே—
(கண்ணன்) தென்றலடித்தாலும் தீம்சுவைக் கிடைத்தாலும்
ஸ்ரீதரனடி போற்றுவாய்—நமக்கென்றுமே குறையில்லை இன்
பமே தடையில்லை இனிதாகப் போற்றிடுவாய் (கண்ணன்) பிள்
ளையை யெடுத்தாலும் பெண்ணை யணைத்தாலும் ப்ரீதி கொள்
கண்ணன் பாலே—பொல்லாக் கள்ளம் கபடற்று நாயனினே
யனை கானமே செய்மனமே (கண்ணன்)

யார்காணும் நீள்சிலை வேடரே:—வெண்ணை கொள்ளாய
னைக் கண்டிரோ வெகு விந்தை செய் மாயனைக் கொண்டிரோ
துதியென்னரும் புகழுள்ளோன் இங்கேயே வந்தானே இமை
நொடிப் போதிலே எங்கேயே பறந்திட்டான் (வெண்ணை) வண்
ணப் பட்டாடை யுடுத்தான் பெரும் வரை தன்னை விரலினா
லெடுத்தான் உள்ளம் எண்ணியே எந்தனினிரு காலும் நோ
கவே மின்னலைப் போலவே சடிதியில் பறந்திட்டான் (வெண்
ணை) திங்கள் நிகர்த்ததோர் நெற்றியே அதில் தெளிவுடன்
விளங்கிடும் சுட்டியே வெண் சங்கொடு சக்கிரம் சதாவும் ஏந்
தினான் சாது ஜனங்களை யேற்றியே போற்றுவன் (வெண்ணை)

பொன்னடி யிங்குதானுள்ளதே நல்ல பூங்கொடி மொழிகுவீ ருள்ளதை புகழென்னுயிர்க் கண்மணி இங்கேயே வந்தானே எங்கே தான் சென்றானோ யிப்போதே சொல்வீரே (வெண்ணெ) சீறிடும் பாம்பினைத்தொட்டானோ சாடச்சிந்தை கலங்கியேயிட் டேனோ பொல்லா மாறுனசூரரை நேரிலேகண்டவன் மாயமாம் சண்டையில் ஓயாமல் புக்கானோ (வெண்ணெ) சின்னம் சிறுவ யதுள்ளவன் மகிழ் சிங்குழலெடுத்து ஊதுவன் சேனீரிங்கேரமா குமுன் பன்முறை யுண்பானே யெங்கும் காணோமே இசைவா கச்சொல்வீரே (வெண்ணெ) கோபியரழைத்துச் சென்றானோ ராயன் குலவிட அங்கு தானின்றானோ மின்னும் சாபநேர்க்கண் ணியர் ஜாலமாயழைத்தவர் தாபமும் தீரவே தந்திரம் செய்தா ரோ (வெண்ணெ)

ஆண்டிப்பண்டாரம்:— ஏண்டியெசோதா என்ன வேண் டிக்கேளாயே ஏதாண்டாமணிவிளக்கன் தோகையே உன்மயிந் தன்- வேண்டாத செயல்தனையே விரும்பியே செய்கிறானே. (ஏண்டி) விடியும்ஜாமநேரம் வீட்டுக்குள் தானுமழைந்து-அடுக் கினப் பானைகளை அழகாக சோதிக்கிறான் (ஏண்டி) காலையா னேரமதில் காரியங்கள் பார்க்கையிலே-வேலைகள் தடைப்படுத்தி வீம்புகள் புரிகிறானே (ஏண்டி) கன்று கன்று என்று கூவிக் கத ரியே ஓடிவந்து கால்களினிடைவழியே நுழைந்தோடிபாய்கிறா னே (ஏண்டி) மத்தியான வேளையிலே சற்று நானயர்ந்திருக்க சிற்றெறும்பைக் காதில் விட்டு தெளிவுறவே பார்க்கிறானே (ஏண்டி) அந்தியானேரமதில் பந்துகளைத் தப்பவிட்டு முந்திமை வந்து தொட்டு முரண்டுகளடிக்கிறானே (ஏண்டி) அந்தப் பொ ருளில்லையென்றால் ஆனாலே பார்ப்பேனென்றான் இந்த விதக் கேலிகளை எவரிடனான் சொல்லலாகும் (ஏண்டி) தூக்கமும்வா தோடி தொல்லையும் குறையாதோடி வாய்க்கினிய ராயனேயன் மனைதையே கொள்ளை கொண்டான். (ஏண்டி)

வாசுதேவனே:— கண்ணன் கானமே இதோ காதில் பாய்குதே கடிகியோடிப் பார்ப்போமென்றால் ஆ! யிதென் [1] வேலையுள்ளதே இதற்கோ ரெல்லையில்லையே விரைவாயோடி

என்னை நாணமொழிவரோ சிச்சிநினைவு தான்தொடர்ந்துவேட்டையாடுதே (3) அச்சமாகுதே அதிகாணமாகுதே அச்சுதனையித்தருணம் காணுவிடிலோ (4) ஆ! ஆ! யிசையே என்னையடிமையாக்குதே அதிவிரைவே துதிபதியைக் காணலே நன்று (5) அவன்தன் ரூபமே யென்தனுசை லாபமே இனிவிநாடி யெனைவிடாது பற்றியிர்க்குதே (6) போப்போவேனங்கே மிகப்போற்றுவேனங்கே ஆ! ஆ! நினைவு அவனிடமே கலந்ததே யிங்கு

தேட்டரும் தென்னரங்கனை:— கண்ணன் கானமே காதில் விரைந்தோடிப்பாய்குதே யுளங்காய்குதேகார்மியாகவே சென்று ஓடியே வருவனே அகம்மகிழ்வனே (1) பாம்பு பசு முதல் பார்த்தளவையுமே கூடுமேமகிழ்ந்தாடுமேபாவியேநான் தனிமையாகவே வாழவோ கடையாகவோ (2) என்னெலாமுமே வந்து சூழினும் இன்னல் யாவுமே தோன்றினும் ஈசனை ஸ்ரீ நிவாசனைக் காணுவேன் மகிழ்வாகுவேன்.

ஜோர் ஜோர்:— பார் பார் பாரய்யனே யென்னையே (பார்) பாபபஞ்சனு பக்தர்தம்ரஞ்சனு வேகமாக நேரதாக அதிவிரைவே துதிபதியே நீ (பார்) திக்கேதில்லையே தேவனே சேனையே நாடி நாடியுன்தனையே பாடிப்பாடியகம் மகிழ்வேன் ஹரியே வந்து அருளு வந்து (பார்)

(கமாஸ் ரூபகதாளம்:—)வேணுகானலோலக்ருஷ்ணா விரைவாயோடிவா- கோணக்கோண சின்னகையின் காட்சியியவா வேணு) வெண்ணைபாலை நானளிப்பேன் மேவியோடிவா- கண்(ணனே நீ என்னைநாடிக் களிப்பை யீயவா (வேணு) ஏதுக்கிந்த இந்த்ராஜாலம்என்னிடமேசொல்லுதுவாதுஏதுமறியேன்சுருணபூஷணு (வேணு)நெற்றிப்பொட்டுபோட்டு னக்குப்பட் டுகட்டுவேன் பற்றி யென்னைத்தழுவவருவாய் ராயனேயனே(வேணு)

பித்தாய் பிறைசூடி:— கண்ணு இதுவேளை கருணையருள் கன்னு பண்ணுர் குழல்தன்னைப்பாடியே வருவாய் (2) விண்ணோர் துதி யெந்நாள்கொளும் ஹரியே என்தன் தேவே- எனை

ணே யெனன்பே இன்பமே யருள்வாய் (2) மந்தரம் தனையேந்தி வான் மழைதடுத்தாய்— சுந்தரா நின்தாளைத் துணையாகக் கொண்டேன் (3) எந்தை நின்னருளாலே ஏரிட்டே பார்த்து இந்தவேளை காத்தருள் இசைராயனேபா. (4)

கலுங்கிடுருள் மீன லோசனி:— அருமருந்திதுத் தனி மருந்திது அச்சுதனென்னுமோர் நல்லமருந்து— திருவருள்புரியும் திவ்ய மருந்திது சீருடன் செல்வமும் ஊட்டு மருந்து (அருமருந்திது) தேவகி வயிற்றில் வந்தமருந்திதுத் தேவர்கள் யாவரும் உண்ணுமருந்து— மாவலியிடமே மூவடிவேண்டிய மாதவ கோபால னென்னுமருந்து (அருமருந்திது) ஆலிலை தன்னிலிருந்த மருந்திது ஆனந்தம் ஈயுமோர் நல்ல மருந்து— கோலாலமாக நடத்துவித்தெங்கும் குணங்கள் யாவையும் கொட்டு மருந்து (அருமருந்திது) அச்சமும் பிணியும் ஓட்டுமருந்திது அமாராவரும் உண்ணுமருந்து பச்சையிலையிலே பால் கடல் தன்னிலே படுத்துச்சிறித்து ஆடு நன்மருந்து (அருமருந்திது) கருகிவாடுமோர் பொற்பயிர் தனக்கு கார்மொழி மேகத்தைக்கூட்டுமருந்து— அரவமீதிலே ஆனந்த நிர்த்தனம் அளவுகளாதின்றியாடு மருந்து (அருமருந்து) வஞ்சனைப்பொய்ச்சூதை வேரற நீக்கியே மகிழ்தரும் வாழ்க்கையை நல்கு மருந்து கஞ்சமலர்க்கண்ணன் கருமுகில் பொன்வண்ணன் களித்துக்குதித்துப்பாடுமருந்து (அருமருந்து)

ஆண்டிப்பண்டாரம்:— நேசம் காட்டிவா கண்ணு ஆசையூட்டிவா மகிழ் (நேசம்) கண்ணனென்னும் நல்லமுத்தே · கனிவாயின் கட்டிமுத்தே— விண்ணோர் புகழுமுத்தே விசையாக என்தனிடம் (நேசம்) தருநீலஜோதிமுத்தே கவலைகள் தீர்க்குமுத்தே- விரைவாக மேவி வா வா வேணுகாதம் புரியுமுத்தே (நேசம்) மயில்தோகை பூண்டமுத்தே மய்யலை காட்டுமுத்தே- ஐயனே 'கானமழைத்தால் அசட்டைதானுகுதோடா (நேசம்) இறுகத்தழுவி யென்னை இசைவா யணைவாய் நன்ன— தருணனை வீசித் தனி கீர்த்தித்தான் படைத்தாய் (நேசம்) மலையையெடுத்ததாலோ மல்லரையடர்த்ததாலோ அலையிற்படுத்த

நாலோ அனுப்புதான் கொண்டனேயே (நேசம்) மத்தடியம் மயக்கம் மதிதன்னை நீக்கியதோ பக்தியாய் நான் பணிவேன் பறந்தோடியிங்கே வாடா (நேசம்)

காணவேணும் காணவேணும் ஹரியை அவன்கனிந்தீயும் காட்சியதன் வகையை— மகிழ்வேணுவின் நாதமிட்டுதேனுவை மேய்த்துக்கூட்டும் ஈசன் மகிழீசன் (1) பாடவேணும் பாடவே ணும் நாளும் நம் தம் பார்த்திபக்கண்ணனையே மேலும்— என் றும் தேடரிய இன்பத்திரள் கூடிடும் நல்லபுகழ் வாராய்த்துதி யாராய் (2) நாடவேணும் நாடவேணும் பதியை நாளும் நாவி னால் மொழியணும் துதியை— வீணாயோடும் நோக்தன்னை யோ தியே நாளும் நன்ன கார்க்கும் வழிசேர்க்கும் (3) ஆடவேணும் ஆடவேணும் மனதே நம்மச்சுதன் கதைகேளினிதே— முனி வர்கள் விரைந்தேகி தேடுவரவனுக்காகி மதியே கேள் துதியே

கரும்புத்தோட்டத்திலே:— கண்ணனைக்காணேனேடி என் தன் கண்களும் கால்களும் ஓடியே தேடியே சோர்வடையு தேடி பதியெலிவடையுதேடி மெலிவடையுதேடி (கண்) எத் தனை யிச்சிறுவன் பூதனை யெத்துகளத்தனை மெத்தவறிந்துவீழ் த்தியே விட்டனனே பெருங்கீர்த்தியை நாட்டினனே கீர்த்தி யை நாட்டினனே (கண்) வ்ருஷப சகடரை இன்னும் வீண ராம் டலரைச் சண்டையில் துவைத்து வெற்றியைச்சூடினனே புகழ்வெற்றியைச் சூடினனே வெற்றியைச்சூடினனே (கண்) பாம்பிடைச்சிக்கினனோ அன்றிப் பகைவரிடம்மே ஓடியே சிக்கி யேங்கியே நிற்கின்றானோ அவனேங்கியே நிற்கின்றானோ யேங் கியே நிற்கின்றானோ (கண்) பர்வதமேந்து வழியவன் பாங் கறியாது வேர்த்து விதிர்த்துத்தயங்கி நிற்கிறானோ அங்கே தய ங்கி நிற்கிறானோ தயங்கிநிற்கிறானோ (கண்) மீனாகமாறின னோ அன்றி யேனமாய் மாறியே தூணைப்பிளந்தாங்கு துள்ளி யே ஓடினனோ அவன் துள்ளியே ஓடினனோ துள்ளியே ஓடின னோ (கண்) வெண்ணெகளவாடி பெண்ணால் விரட்டிட ஓடியே ஓர் புறமமைந்து விம்மவே செய்கின்றானோ மிக விம்மவே செய்

கின்றனோ விம்மவே செய்கின்றனோ (கண்) முனிவர் கண்டனரோ அன்றிமோகப் பட்டணங்கைத் தன்னுசை யோங்கிட மறைத்துவிட்டனளோ அவள் மறைத்துவிட்டனளோ மறைத்துவிட்டனளோ (கண்) கால்கள் சிவந்தனவோ இரண்டு கண்கள் கலங்கி யெண்ணம் மழுங்கி அசைவற்று நின்கின்றனோ அங்கசைவற்று நிற்கின்றனோ அசைவற்று நிற்கிறனோ(கண்) மலைகாள்வந்து சொல்வீர் நல்ல வளமான மூங்கில்காள் யமுனு நதிகாள் கண்ணனைக் கண்டதுண்டோ என் கண்ணனைக்கண்டதுண்டோ கண்ணனைக்கண்டதுண்டோ (கண்)

ஸ்ரீதானுராகு ராமா:— ஆலிலைப் பள்ளிகொள்ளும் கோபாலா என்னையாதரவாயாண்டருள்வாய்பூபாலா-கோலால மானதோர் சிங்கார ரூபனே கூவினேன் மேவியே தேவையை ஈயவா (ஆலிலை) ஏனென்று கேளாததென்ன மாயமோ இது இனிய உன்னருள் தனிதமோ— நானேது சொல்வேன் நயமுடனே கேளாய் நாதனே நீதனே சோதனை செய்யாதே (ஆலிலை) பாலனுன்னை யேற்றியங்கே கூவவே. தூணில் பரிவுடன் வந்து நின்ற தேவ நீ— சிலமாய் நின்தன் நாமம் தினமுமே பாடுவேன் சீதராமாதல ஆதர வீந்தருள்வா, (ஆலிலை)

மாத்தாட பாரா தேனே:— மோடி செய்வது நியாயமா மோகன சியாமா (மோடி) அனுபல்லவி: பாடியே யுன்னையே பரிந்தாடி வேண்டுகிறேன் (மோடி) தித்திக்கும் செங்கரும்பே தெவிட்டாத நன்விருந்தே— எத்திக்கும் புகழோங்க எளியேனைப்பாராமல் (மோடி) பொன்னொளிர் நல்முத்தே— புகழிசை நல்வித்தே இன்னும் தாமசமேனோ இறைஞ்சியே வேண்டுறேன் (மோடி) ஆவியே யின்னமுதே அச்சுத முராஹரே மேவியே வந்தருள் விண்ணவர் புகழ் தேவே (மோடி)

ஆரபி ஆதிதாளம்:— ஆடினுனரங்கன் அற்புதமாகவே அனைவருமே வந்து ஆனந்தம் கொண்டிட (ஆடி) அனுபல்லவி:- பாடினுரெவர்க்கும் பரசுகம் அளித்திட பல பல விதமாகப் பயில் நடம் தெளிந்து (ஆடி) தும்புரு நாரதர் இனிமையாய்ப்

பாடத் துதிசேர் சுந்தியும் மத்தளம்போட— அம்பரமுள்ளோர் நறுமலர் தூவ ஆசி பலகூடி ஆனந்தமாக (ஆடி) பன்னகமீதிலே பதமலர் வயித்து பதைக்கவகைகளை மின்னவே விடுத்து— புன்னகை முகத்தில் பொலியவே வைத்து புவியொடு விண்ணுளார் போற்றியே துதிக்க [ஆடி] சுந்தரமுகத்திலே சுருண்ட கூந்தலாட சுவர்ணமாம் ஈகைகள் ஜொலி ஜொலித்தாட— நந்த கோபாலன் நவநீத அஸ்தன் நாரணனுளம்சேர் நளினமுகக் கண்ணன் [ஆடி]

பொன்னார் மேனியனே:— கண்ணன் கருமுகிலே கடிமாமலர்ப்பொன்னிதனை— பெண்ணாய்க்கொண்டவனே பேரின்ப நற்றினை; எண்ணு நற்புகழைஎந்நாளும் பூண்டவனே பண்ணுரிசைகள் பாடிப்பரவியே போற்றிடுவோம் (1) அரிவி ஓடையிலே அந்த ஆனந்த புற்றரையில்— மருவுமாலையிலே மனம்பொறி சேரமைத்து; திருமால் கண்ணனையே எம் சிந்தை கூர் மெய்ப்பொருளை— பெருமான் பேரருளால் ப்ரியமாய் நாம் துதிப்போம் (2) ஆடிப்பாடிவரும் முதலாம் எத்தொழிலிலும் நாடு நம் கண்ணனெனநாவினாலேற்றிப்பாடி; வாடாபொந்செல்வனே நல்லமாதவவல்லவனே— கூடித்யானம்செய்துகுதூஹலம் பூண்டிடுவோம் (3)

சோமசேகரனருளும் பாலா வேலா:— நேமமாக வுலகையாளும் தேவா தேவா என்னை நித்தியமே காத்தருள மேவாய் மேவாய்— க்ஷேமமான வாழ்வு தர வா வா வா வா உளம் சிந்தைகளிகூர்ந்திடவே காவாய் காவாய் (1) யானை தானும் கூவிடவும் அதன் குறையைக் கேட்டாய் கேட்டாய் உடனுருதவியதனிடமே வைத்தாய் வைத்தாய்—வான்மழையினிடர் தனையே தீர்த்தாய் தீர்த்தாய் என்தனிடம் வர்மமேனோ சாற்றாய் சாற்றாய் (2) சிந்தலைகளோசையாலே செவிமந்தம் ஆச்சோ ஆச்சோ நெடுந்தெளிவானத்தூக்கமதால் உணர்வுதான் போச்சோ போச்சோ— அந்தரத்தில் மலையைத் தூக்கி வேதனைதான் ஆச்சோ ஆச்சோ அன்றி அளவில்லா யுணவை யுண்டு அசமந்தமும் ஆச்சோ ஆச்சோ (3) பக்தர் தம்மைக்காப்ப தன்றோ

பெருமை பெருமை இதைப் பகாணுமோவுந்தவதோருரிமை யுரிமை சித்தம்தன்னை யென்தன்பாலேஹரியே ஹரியேசெலுத் தித்திவினையையே யகற்றாய் துரையே துரையே

அம்பிகேயுன் மகன் குகன்:— என்னடியுன் மகன் கண்ணன் இடும்பெலாம் செய்கிறானே- சொன்னாலும் கேட்பானில்லை சூது வாது செய்திடுறான் (என்னடி) தொட்டிலிலென் தன் பிள்ளை தூங்கிடுமந்தவேளை பற்றியே இருட்டிவிட்டுப் பதரு மனதைச் சிதாவிடுறான் (என்னடி) வேலைபா யுள்ளிருக்க வெளியிலே தாழ்ப்பாளிட்டு- சீலமாயென்னைக்கூவித் திறந் திடவே கேலியாடுறான் (என்னடி) பல குரல்வந்து போட்டுப் பறந்தோடிவரவே செய்து- கிலுகிலெனத் தானகைத்துக்கேலி யெல்லாம் செய்திடுறான் (என்னடி) மாலையானேரமதில் மாடு கள் திரும்பும்வேளை- கோலமாய் மடுவருந்திக் குடிக்கும்பாலே இலதேயாக்கிறான் (என்னடி) உன் மகனிடைஞ்சலாலே யூர் விட்டுப் போகணுமோ— மன்னர்கள் நீதிகாணேன் மானேநீதா னேது செய்வாய் (என்னடி)

புள்ளிக்களாப மயில் பாகன்:— கண்ணுக்கிசைந்த மண வாளன் எல்லாக்கவலையை ஓட்டுவிக்கும் தோளன்- மலராணைக் கூவிடக்கண்டு ஆனதுன்பமையை யீந்த சீலன் மகிழ் கோலன் (1) பண்ணிற்கிசைந்த நல்ல கீதன் கண்ணன் பாரிலே புகழ்மிக்க நீதன்- கூடிமேயும் பசுக்குலம் ஆவினம் நல்ல மக்கள் கேட் கும் களியார்கும் (2) எந்த நாளுமிவனருள் வேணும் எல்லா விதமான இன்பம்தானே தோணும்— இந்தப் பூவியிலிவன் காட்சி சேவைதானுமென்ன மாட்சி பாராயிதை பாராய்.

அடாணா ரூபக தாளம்:— வீட்டுக்குளோடி நீ வெண்ணை பால் பானையை வீணிலே யேனுடைத்தாய் இப்போ காட்டு நின்காரணம் பொய்யாகக் காணிடில் கட்டியடிப்பேன் தப்பா திங்கே (பதில்) அக்கக்கவ்வேலை யண்டமீது தன்னில் யாரு தான் செய்திடுவர் இங்கே புக்கதோர் பூனைகள் போராடி விழு ந்திடப் புதுப்பானைக் கேதுவாச்சு (1) கள்ளத்தனமாகக்கட்

டிடம்புக்கு நீ சன்றினை யேனவிழ்த்தாய்— செல்வாயுள்ள தோர் நின்கதை உரையாதிருந்திடில் ஓங்கிடுமென்தன் கோப மது (பதில்) இடியன்னபேரொலி யங்கொன்று தானெழ இரண்டுமே பயமடைந்து அவை திடுக்கிட்டுத் தும்பினை யறுத் துக்கொண்டிங்ஙனே தெளிவுடனின்றது கேளடியோ (2) இச் செய்தியாவுமே அண்ணன் கேட்டதாக என்னிடம் தானுரைத் தான்— மிகப்பச்சைப்பிள்ளை யெனப் பாராட்டிவந்தால் பழி யையே புரிகின்று யென்தனிடம் (பதில்) அண்ணன் மொழி தன்னை யின்னுமறியாயோ அன்புள்ள அன்னே நீயும்— அவன் எண்ணிலா நாளாக என் பகை கொண்டவன் என்னையே தூற் றுறுனெப்பொழுதும் (3) (முடிவு) இன்னிசைச்சேய்தானுமிவ் விதம் சொன்னதை மீன்றுளும் கேட்டிடவே- மகிழ் என் னருக்கிள்ளைநீ யிங்கு வாராயென எடுத்தங்கே முத்தமிட் டாள்.

கோழி கொக்கர கூவெனக் கூவியே:— கூடைப்பழக் காரி கூடைப்பழக்காரி கொண்டு வா மொத்தமிங்கே பிஞ்சா குதிர்ந்தது வெம்பி விழுந்தது அழகானவுந்தன் பழம் (பதில்) வாடியே நிற்கும் பயல் ஓடி யொழிக்கும் பயல் வாயேது இந்த நீளம்- நாடாளும் ராஜாக்கள் நாடியே என்னிடம் கனியெக்தி யுண்பாரேடா (பதில்) ராசாக்கள் மோகிக்க வூட்டுமோருன் கனி வாசலில் வருவதேனோ பேஷ் பேஷ் வுன்மொழி புதிதாக நான் கேட்டேன் பிதற்றுதே போடி நீயே (பதில்) மண்வாரி மொக்கிடும் கில்லாடிப்பயலே மாம்பழம் ஏற்காதோடா ஆ ஆ அப்பழக்கம் ஆனதே நற்பழக்கம் செலவுகளேதுமில்லே(பதில்) காசுமேலாசையாய் மோசம் புரியுமோர் நயமான வேஷக்காரி காசுக்கிழந்தமானம் பேசினல் மீளுமோ கில்லாமலே போடி நீ

ஜாதுமாம் ஜாவோ ஜாவோஜில்தா:— ஜாலமோ இல்லை யோ சொல்லுவாயே நீலமேக வண்ணனே வருவாயே சுகமாக அருள்வாயே (ஜாலமோ) மனமகிழச்செய்யவா தேவ ஹரீ துரையே நீ வருவாயே நாராணன்னேச (ஜாலமோ)

மோகனம் சாப்பு தாளம்:— கண்ணனே என்னமோஷண்டா உனக்கிது கற்பித்தவர் யாரடா (அனுபல்லவி) புண்சொல்லை யியுமுன் புகையுதே கண்களும் புலம்பிடும் உதடிது என்னமாய் துடிக்குது (கண்) வெண்ணை நீ களவாடலாம எப்படி நான் விரித்ததையுரையாடலாம்— எண்ணங்கள் இவை நன்று என்மொழி சரியன்று இசைவாக இப்போதே பொருளெல்லாம அறிந்தேனே (கண்) எத்துகள் பலசெய்யினும் சிலனே நான்சித்தம களித்தாடனும்- சுத்தவம்பனென்றுசொல்லவேயாகாதே சூக்ஷமமிதனைநான் இப்போதே அறிந்தேன் (கண்)

ஸ்ரீராமச்சந்திரனே:— நந்தகோபால க்ருஷ்ண நவநீத சோர க்ருஷ்ண; ப்ருந்தாவன க்ருஷ்ண வா வா வா வாராயே சற்று வாராயே (1) கட்டு சதங்கை நாதம், இட்டு இனியகீதம் கொட்டி முழக்கியே வா வா வா லோலனே அதிலீலனே (2) பட்டு பீதாம்பரமும், பொட்டு திலகம் தானும் இட்டு நான் மகிழ்வேன் வா வா வா நேராக முற்றும் சேர (3) சந்தனம கஸ்தூரியும், ஷண்பக பாரிஜாதம், இந்த நேரம் ஈவேன் வா வா வா ஓடியே பறந்தோடியே (4) வெண்ணை பால் நற்றயிரை, எண்ணங்களித்திடவே பண்ணியா ஈகுவேன் ,வா வா வா வேளையே நல்லவேளையே (5) தாமசம் ஆக்காதேடா, கோமள இது நேரம் ப்ரேமையாய் வந்து நீ சேர் சேர் சேர்.

அலங்காரம் அலங்காரம்:— குதிப்போம் வா குதிப்போம் வா. கண்ணனையே நாமகிழ்ந்து குதிப்போம் வா குதிப்போம் வா. (சரணங்கள்) துஷ்டரைத்தானடக்கத் தூயோரை வந்து காக்க ஸ்ரீஷ்டீசன் கண்ணனவன் திருவேட்ய் தான்புனைந்தான் (துள்ளல்) வாடிரங்கமே கொஞ்சம்பாடு தங்கமே புண்யம் கூடும் உன்தனை காள் (குதிப்போம்) அசுரனும் அருமறையை ஆழ்கடல் தன்னிலாழ்த்தத் திசை புகழ் திருமாலவன் தீவிரம் அந்தவேளை (துள்ளல்) மீன்வடிவமாய் உடனேயந்த தருவாய் மறைகொணர்ந்தான்மகிழ்வாய்ப் பாடித் (குதிப்போம்) சுரரோயே தானுபர்த்தச்சுகமெல்லாம் தானளிக்கத்திரைகடல்

தன்னில்மலே செம்மையாயமையும்வண்ணம் (துள்ளல்) மால்வி ஸாவாக ஓரகன்றமுதுகாய் எடுத்தான் ஆமையுருவாய் நாடித் (துதிப்போம்) பூமியைராக்ஷசனும் பாயாகத்தான் சுருட்டிப் பொங்கு கடல்தன்னிலாழ்த்திப்புகுந்திட்ட அந்தநாளில்(துள் ளல்) ஏனவுருவாய் உடன்கொண்டு விரைவாய்க் கொணர்ந் தமாலேயறிவாய் புகழ் (துதிப்போம்) பாலனைமிகவருத்தி பக வானைக்காட்டுஎன சிலனுரைத்தபடி சீரியேதூணுதைக்க (துள் ளல்) அதுபிளக்கவே துஷ்டன் உடல்கிழிக்கவே சிறுவன்தான் களிக்கவேபார் [துதிப்போம] பலிசக்ரவர்த்தியவன் பலமான யாகம்செய்துநலமில்லாக்காரியத்தைநாடியேதான்துவக்க[துள் ளல்] குள்ளவேடமே போட்டுபலியினிடமே தலேயில் வயித்த பாதமே நாம [துதிப்போம்] தந்தைதன்சொற்படியே தாயின் தலேயைக்கொய்து சிந்தைகளிக்க ஆங்கே திரும்பியே தாயடை ந்தான் [துள்ளல்] பரசுராமனே பின்னர் சீதாராமனே கண்ண ன் அண்ணன் ராமனேப்பாடி [துதிப்போம்] கருணையை எங்கும் தேக்கிக் கல்கியின்வடிவமாக வரகவிராயனுள்ளம் மகிழ்வித்த நம்தம் மாலே [துள்ளல்] நாளும்பாடுவோம் நாம்குதித்து ஆடு வோம் மனம்களித்துவாழுவோம் சீர் [துதிப்போம்வாகுதிப் போம்வா]

தேட்டரும் திரள்தேனினே;— மாற்றரும்பசும் பொன் னினேநல்ல மரகதநிகர்வண்ணனே, ஏற்றங்கொண்டதோர் ஆய னே தனியிசையினே மகிழ்மாயனே—தேற்றமுற்றவன் தாளினே யேந்தித் தினமுமுவந்து நாம்பணிகுவோம், போற்றற்குரிய தோர் பொருளேநாமுற்று இனிதேவாழலாம்நன்னெஞ்சே[1] உயிரும்அவனது உடலும்அவனது உலகிலுள்ளோர்கள் போற் றிடு, ஜயமும்லாபமும் தோல்விநஷ்டமும் தாமரைக்கண்ணன் லீலேயே—பயமும் பாபமும்நாளும்அகற்றியே பக்திசெய்கு வோம் அவனேயே, நயமாம்முறையிது நமக்கிசைந்தது நாளும் உவந்து நாம் பணிகுவோம் [2] இனியநீருடன் எழில் சுடற் காற்றிசைந்து நாடியேயுண்டிடும், கனியும்காய்களும் கடிமலர்ப் பூவும் கரும்புசெந்நெலும் அவன்காணாய்—பனிமலேகளும் பரு

மணிகளும் பார்வைமீறிய எதுவும் மனதிலெண்ணியே நாளும் பாடிடும் மகிழிசையாவும் அவனதே [3]

தற்கால இந்தியாவைச்செம்மையே யாக்கவந்த சன்மார்க்கப் புகழ்சிலன்காந்தி:— அடவியுளானையொன்று அளவில்லாத் துயருண்டு ஆதிமூலமெனவழைக்கவே- ஓடியேதேவ அருள் தனையதன்பா லளிக்கவே ஆ ஆ ஆ ஐவராணங்கையவளாடையுரியக்கண்டு ஆக்ருஷ்ணனெனக் கூவவே— ஆடையுமங்கே அளவில்லாமலே குவியவே— (2) ஆ ஆ ஆ சிறுவனும தருவனவன் செய்தவந்தனை மெச்சி சிறந்ததாம் ஓர் நிலை யீந்தாய்— கண்ணனே நீதான் செகமெல்லாம் புகழவே நின்றாய் (3) ஆ ஆ ஆ துஷ்டனே கடவுளைத் தூணிலே காட்டுதென தாபனும் ப்ரஹ்லாதனுன்னைத் துதிக்க— பாலனைப்பேணித் தூள்ளு சிங்கமாகக் குதிக்க (4) ஆ ஆ ஆ சருவமும் நீயேயானால் சருவேசனீயே யானால் தக்ஷணம் ஓடியே வாவா- கேசவக்ருஷ்ண க்ருபையை யருள்தேவா (5)

சொண்டிச்சிந்து:— பொல்லாதச் சிறுவனடி— நாங்கள் போகையில் வருகையில் வழிமறிப்பான்; இல்லாத இடும்புகளைக்- கேளிருந்த இடமிருந்தே புரிந்திடுவான் (1) பின்னல்கள் முடித்திடுவான்— அதனால் பிரிந்தோடத்தயங்கிட நகைத்திடுவான்; கொன்னலைக்காட்டிடுவான்— இஃதோர் கொழுப்பானவளர்ச்சியைக்காட்டுதேடி (2) கண்ஜாடை கைஜாடை— ஆ ஆ ஆ கண்டவரெவருமே பகைத்திடுவார்; வெண்ணை களவாடி- எங்கள் வீட்டிலே கொண்ட அடிக்கணக்குறுமோ (3) கொஞ்சமும் ரோஷம் இல்லை— அடிகொடுத்திடக் கொடுத்திட அதிகமடி; அஞ்சவதேதடியோ- தானு யடங்கினலன்றி வேறு மார்க்கமும் இல்லை. (4) மனம்பொறிபவன் தனையே தேடி வசமீறி ஓடியே செல்லுதேடி; இனியதோர் அவனுதம்- இவை யித்தனைக்கும் காரணமாய் நிற்குதேடி (5) வேணும் அவனருளே.

மதுரை வீரன் காட்டேரி:— கண்ணு கண்ணு யிங்கேவா

கட்டித்தயிருண்கலா, மண்ணை மண்ணை புண்ணாதே மருந்தால் வந்து ஏங்காதே. புண்யா புண்யா யிதோ பாராய் பூந்தியல்வ நெய்ஜிரா, எண்ணிலதின்பண்டம் நீயேந்தாய் எடுத்து வுண்பாய் நீ நன்காய்; லட்டுபூறிபால்போலி லக்ஷணமானபதிர்ப்பேணி, பட்டிக்கண்ணு கொழக்கட்டை பத்து அஞ்சு இருக்கட்டே, வட்டக்கிண்ண நறுநெய்யே வளமாயுண்பாய் நீ ஐயே, புட்டுப்புட்டு நெய்ப்புட்டு மட்டில்லாதே நீ கூட்டு (துரிதம்) சுளாயிலே ரெண்டு வடையிலேமூணு தோசையில் நாலு முருக்கிலே அஞ்சு தொடையிலே ஆறு முதுகிலே ஏழு, சுடச்சுடப்போடப்போடச் சுருட்டியே யிழுக்கும் (கண்)

கம்போதி ஆதிதாளம்:— மங்கள கலியாணக்ருஷ்ணமாதவ சிங்காரக்ருஷ்ண. இங்கு நீ விரைந்தேகி இசைவாக வாவா— சங்கு சக்ரபாணீ சஞ்சலம் தீர்ப்பாயே நீ, பங்கய நின்னடிக்குப் பணிகுவேனெந்த நாளும் (மங்) தந்தையுனீ யல்லவோ தநயனும் நானல்லவோ, சந்தேகமிதிலுண்டோ சாற்றுவாய் நன்று— சுந்தரக்கண்ணனேயுன் துணையையே நாடினேன், மந்தரமெடுத்தாண்ட மாதவஸ்ரீ க்ருஷ்ண (மங்) சகலமறிந்தோனுக்குச் சாற்றவும் தேவையோ, ஜகம்புகழ் ஸ்ரீ க்ருஷ்ண தயையை புரிவாயே— தகவிலச்செய்திடினும் க்ஷமித்து நீயருள்வாய், இகபரசாதகதேவ ஹ்ருஷிகேசகண்ண (மங்) பாய்விட்டகன்றப் பறவைமீண்டதைப்போல நேயனேநான் மறந்து நின்னைமீண்டடைந்தேன்; நோயான ஆசை நீக்கி நுண்ணறிவெனக்கீந்து, ஞாயமாம் வழிதன்னை யாதவ நீ யீந்தருள்வாய் (மங்)

கமாஸ் ஆதிதாளம் துருசு:— கொடுக்கக்கொடுக்க ஆசையென்னடா கோபாலனே சீலனே வெண்ணைக் (கொடு) அநுபல்லவி; அடுக்குமோ நினக்கிந்த அளவில்லா ஆசை யிது ஹரிஹரிக்ருஷ்ணனே அச்சுதா கேசவா (கொடு) அந்தக்கையில் வெண்ணை இந்தக்கையில் வெண்ணை அளவிலா தின்னவும் வெண்ணை அவ்வப்போதீந்தேன்— சுந்தரக்கண்ணனே தொந்

திரைப்பொறுக்கில்லேன் ததிராயனிவேச விடுவிடு நின்னடம் (கொடு)

கமாஸ் ஆதிதாளம் துருசு:— பார்க்கப்பார்க்க ஆசை யாகுதே பரந்தாமனே கண்ணனேயுனைப் (பார்) அனுபல்லவி: கேட்கக் கேட்கக் கதை கேட்குதே யென்தனுள்ளம் கேசவ மாதவா கிளரொளி சீர்வண்ண (பார்) அழகெலாம் உருக் கொண்ட அச்சுதானந்தனே ஆனந்தரூபனே அருள்பொழிவா வா தொழுவேனுனுன்னையே தூயனே கேளேயேசுத்தனேநித் தனே இங்கே நீ மேவாய் (பார்)

தாயே யேசோதே யுன்தன்:— பாராயெசோதே யுன் தன் பாலகோபாலக்ருஷ்ணன் பாடாய்ப்படுத்தியே கோசுவே வைக் கிறானே (பாராய்) அநுபல்லவி: பாரினிலவனைப்போலாரை யும் காணேனேடிப் பார்க்கப்பார்க்கவன் வேலை விந்தையாய்த் தோணுதேடிப் (பாராய்) காலில் சிலம்பிருந்தும் அதனொலித் தானடக்கிக் கள்ளத்தனமாக வந்து வெண்ணையை யுண்டான் சிலேயிவன் திருப்பையில் கெலுகெலு என்னுகாதம் சிவிர்ப்ப விட்டவனங்கு இமைப்பிலே மறைகிறான் (பாராய்) எத்தனை யோபேர்கள் நாங்கள் எத்தனங்கள் பலசெய்தும் எத்தி எத்தி நம்மெல்லாரை வஞ்சித்திடுறான்— பித்தனென்று ஏசினுலும் பெருமையே யவனுக்கு பிறிதெவரையுனுன் பிதற்றவே செய் யேன் (பாராய்) பூதகியாம் காதகியை பூப்போல அவன்தொட் டுப் போதும் போதுமெனவே கூவவிட்டான்- கீத நாரணனே யன் கிளரொளி மணிவண்ணன் கேட்கக் கேட்கச்செயல்கள் ஆனந்தமாகு தம்மா (பாராய்)

வேலவா யுன்னையே நம்பினே னிங்கு நீ:— சீலனே வுன் னைநான் கூவினேனென்னையே வா வா வா வா யென்தன் கண் மணியே நீ லீலனே லோலனே சீலனே கோலனே வா வா வா யென்தன் கண்மணியே நீ— நீலமர்மலையை யேந்தியே நின் றோனே, நிரைகளாவையும் காத்து மகிழ்ந்தோனே, கோலாவ மாகவே ஓடியே மேவுவாய் கூசாமலென்னையே நாளுமே யாள

வா, வா வா வா வா யாதவனே (சரணம்) நாரி மணிக்குப்போ ராடையை யீந்தவா நவிலுமோரைவர்க்குப்போரையே வென்ற வா, காரணனுளம் காணும்புகுந்தவ நாடியே என்னையே ஓடியே யின்னமே வா வா வா வா மாதவனே பூதரா ஸ்ரீதரா சோதனை செய்யாமல் வா வா வா வா யாதவனே.

சேட்டோரம் வீட்டுக்காரிக்குட்டி:— கேட்டமும்போடா தேடாகண்ணு மோயாக்கி வையாதேடா—பாட்டையே நீநிறுத்தி கண்ணு பவளவா யீந்தருள்வாய் (1) மோகன கண்ணனே நீ மோசமும் செய்யாதேடா— வேகமா யென்னைநாடி விருப்பமே கூட்டிவைப்பாய் (2) எத்தவே ப்ார்க்காதேடா என் சொல்லை நீ தட்டாதேடா— பித்தாகியுள்ளேனையா நீ ப்ரேமையை யீந்தருள்வாய் (3) ஐம்பொறி யாவியாவும் அடைக்கலம் உன்தனக்கு—அம்புய பொற்கண்ணனே ஆதாவுசக்தருள்வாய்

ஒட்டோட்டாம் பூவே பூவே;—கட்டடா கண்ணனையே கயிரதைத்தான்கொணர்ந்து— விட்டிட்டால் பறந்திடுவான் விரைவாகஓடிவந்து (கட்) பாம்புகள் பிடிக்கிறான்கேள் பாவை மேல்தொடுக்கிறான்கேள்—வீம்புகள் காள் புரிந்து வேடிக்கை காட்டுறாண்டா (கட்) பொல்லாதஇவனைப்போல பூமியில்பார்த்ததில்லை— இல்லாத இடைஞ்சல்களை இமைநேரம்புரிந்திடுறான் [கட்] வீட்டிலே யிவன் தொல்லை வெளியிலே யிவன்தொல்லை— நாட்டிலே யிவன் தொல்லை நதியிலே யிவன் தொல்லை [கட்] பட்டப்பகலில் அங்கு பாங்காகக் கூடிருக்க— மட்டில்லா இடும்புசெய்து மான்போலே துள்ளிவிட்டான் (கட்) பூசைமேல் பூசை தந்து பூரிக்கப்பார்த்திடுவோம்- ஆசைசேர்நம் கண்ணனை அதட்டியே வைக்க வேண்டும் (கட்)

ஜாவளி:- காபி ஏகதாளம்:- அப்புடே செப்பிதினி:— கொள்ளைகாரன் வருவரென்றக்கூவினேனேசொன்னேன்-கள்ளக்ருஷ்ணன் கைப்பொருளைக்கவர்ந்து கொண்டே சென்றான் (1)வழிதனிலே கூடை பொட்டி ஐயையோ இறக்கிபழிமொழிகளாவும் கூறிப் பற்றியோடினானே (2) எத்தனையோ ஜாக்கி

றை யெடுத்துக்கொண்டோமேடி— மெத்த சிறுபயலிவன்காண் எத்திபோடினனே (3) நூறுபேருய் நாங்கள் கூடி நொருக்கிடவே எண்ண- மாறி மாறி எங்கண்டு ஒடியவன் மறைந்தான் (4) அட்டா அ என்தன்பானே என்னழகு பாராய்-- கொடுமை இது அல்லவோடி கோபாலனின் கூத்து (5) சித்திரத்தின் கைத்திறமே செப்பிடவே முடியா-- பத்மினியே பார்த்தாயோடி பாலனிவன் லீலே (6) யாராரையோ அடக்கினதாய்க்கதைகள் வந்துகேட்டோம்— பார்மீதிலின்னவனே படக்குவோரைக் காணேன் (7) அத்தை மாமன் அதட்டுவாரே யானென்ன செய்வேன்— உத்தமியே இத்தருணம் உன்பானேயைத்தாடி (8) பானேயது தந்துவிட்டால் பணத்துக்கென்ன செய்வாய்— மானேயெந்தயோஜனேயும் வருத்தம்தானே நீயும் (9) இடைஞ்சல் தாள இவ்விதமே இங்கிதனேச் செய்தான்— திடமுடனே கல்மனதாய்ச் சகித்திடவே வேண்டும் (10)

டெல்கேகு டெல்கேகு டேரி டேரியா:— பால்காரி பால்காரி பாலே யிங்கே கொண்டுவா துளி நாக்கிலே சொட்டடியோ ருசியினேக்காட்டடியோ சிச்சீ இ யுன்பாலுமேதேனுமாமாறலேயே போடி நீ தூரப்போடி கிட்டக்கே காடாதேடி (பால்காரி) பதில்:- வை காசு வை காசு வாங்கின பாலுக்கு வை காசு வை காசு தப்பிலிபையா வுன்னேத் தப்பவிடேன் உண்மை பார்வீட்டுப்பிள்ளை யேனும் அச்சுத க்ருஷ்ணனேனும் (வைகாசு)

தோடி ராகம் ஆதிதாளம்:— நவப்பழக்கூடைக்காரி நல்லப்ழம் நீ தாடி (நவ) அநுபல்லவி:— இவ்வருஷம் பழமில்லை இனிப்போதுவர்ப்போ சொல் (நவ) தானுக வுதிர்ந்ததோ தாயே நைகொண்டதோ— தேன்மொழி யின்னதைநீ செம்மையாய் மொழிகுவாய் (நவ) சாலேயிலே கொண்டபழம் சச்சரவேதுக்கம்மா மாலேயிலே பறித்தீயும் மாமாய் சாரி (நவ) நீலநிறமிது வென்ன நேர் சீர் கருப்பீதென்ன— சீலே சின் உள்ளமுமே இந்நிறம் கொண்டதாமோ (நவ)

மோகன ராகம் சாப்புதாளம்:— மல்லுக்குவாடா சண்டைக்குவாடா வெல்லலாம்வாடா விரைவிலேவாடா தோள்தட்

டித்தொடை தட்டி சரிகட்டி நீ யுற்று (மல்) இடக்கையை வீச வலக்கையை வீசு திட்முடன் வீசு தேர்ச்சியாய் வீசு அப் பப்பவுன் பலம் இப்போது விளக்கிட (மல்) தோளோடுதோளை காலொடுகாலை மார்போடு மார்பை மிகநன்ன வெகு நன்ன உர சிட்செய்து (மல்) ஒதுங்காதே பங்கே பதுங்காதே பங்கே பறந்தோடிவாடா இசைவான நற்பெயர் இனிதாக ஏந்தி(மல்)

மோட்டாரு மோட்டாரு மோட்டாரு:— ஏதேது ஏதேது ஏதேது என் தன் கண்ண- என் தன்சொல்லை மீறி நடப்பதென்ன (1) வீதியில்போகாதே யென்று நான் சொன்னேனடா இப்பொழுதே வீண்கலகம் களவுகள் செய்தாபேட (2) சூது பொய் வஞ்சகம் செய்யாதே யென்று நான் சொன்னேனேடா சொல்லியுமே சூழ்வினைப் புதிதாகப் படைத்தாயேடா (3) தாழியின் வெண்ணையை தோளிலேயேறியே அள்ளி நீயென்று வுண்டாய்- தாமோதரா தாழ்குழல் அவள் முகம் ஏனுமிழ்ந் தாய் (4) மடுவினில் விளையாடி மறை பாம்பைக்கையாடி ஏனோ நீ மகிழ்ந்து நின்றுப் அட்டா வாதாட நோயில்லை (5) உர லிடைகட்டியும் ஒப்பாதடித்துமே உணர்ச்சிதானேது இல்லை ராயன் சிருத்தம ஓதுவாயுன்தன் சொல்லை (6)

ஆனந்த பைரவி ஏகதாளம்:— ஆலிலையிற் பள்ளிகொண்ட கள்ளகோபால கூவியுன்னை நானழைத்தால் பார்க்கலாகாதா (1) ஆதிமூலமென்று சொல்லி யானை கூவவும் நீ யாதாவாயோ டியங்கு புரிந்தாயருள் (2) தூணிலிருப்பானென்று சுட்டிகாட் டவும் அங்கே தூய சிங்கவடிவுடன் சேவை யீந்தனை (3) எம் மையனே என்னையும் நீ இனிதாளவா நின் இணையடி மலா தன்னைப்போற்றுவேனுனும் [4]

தன்னியாசி ஆதிதாளம் துருசு:- ஒடித்திரியும் கண்ண மோடிபுரியும் கண்ண ஒரு முத்தம்தனை ஈவாய்-- பாடியேயுன் தனைப்பாரெலாம் புகழ்வேன் பறந்தோடியிங்கு நீ வா வா ரங்க னே [ஒடி] தூணினோமாக சுந்தாமுகத்தை நீ தூயனேமறைப் பதென்ன? நாணமும் ஏதுக்கு நம்முள்ளாவழக்கு நகைமுக

மாகவே வருவாய் நீ யிங்கே [ஓடி] நெருங்க நெருங்க நீ ஒதுங் கிபோதுங்கிருப் பினென்னமெதுவோ அறியேன்-- பெருங் குணமுள்ள ப்ரேமையாய் நீவா பேரிச்சைக்கனியை நிறையவேதருவேன் [ஓடி] கையையே நீட்டாய் கதிர்முகம் கர்ட்டாய் காட்சிசேர்முத்தமே கூட்டாய்-- ஐயனே ஹரியே ஆருயிர்த்தாயே ஆனந்தருபனே ராயநன்னேயா [ஓடி]

தோடி ராகம் ஆதிதாளம்;— கூட்டிவந்து சேரடி கோபால ஸ்ரீ ஹரியைக் (கூட்டி) சரணங்கள்:— நீலமேகவண்ணனடி நினைவோர் தம் நேயனடி கோலமயில் தோகையோனே குணமுட னீ விரைந்து (கூட்டி) சங்குநற் சக்கரத்தான் சஞ்சலம் நாட வொட்டான்— பங்கயக்கண்ணனை நீ பறந்தோடி மொழியா டிக் (கூட்டி) பவள நிகர்த்தவாயன் பக்தியருளுபாயன் அவனி சீர்புகழ்கொளும் ராயநன்னேயனைக் (கூட்டி)

காவடிச்சிந்து ஏரடித்தாளம். துள்ளியோடிவாகண்ண துள்ளி யோடிவா கொள்ளை கொள்ளே நல்லவெண்ணை குணமுடனு னளிப்பேன் (துள்ளி) இங்கேயோடிவா கண்ண இங்கேஓடிவா— இங்கிதமாய் பொற்சதங்கை சங்கீதங்கள் முழங்கிட (துள்ளி) மோக நயனு கண்ணு நாகசயனு— வேகமாக என்தனிடம் விரும் பியே நீ மகிழ்ந்து (துள்ளி) சூது செய்யாதே கண்ணு வாது செய்யாதே— யோர்து தோறும் என்தனக்கு புகழிசைமுத்த மீவாய் (துள்ளி) தாமசமேனோ கண்ண தாமசமேனோ- கோமள மாம் நின்காட்சியை குதுகலமாகக்காட்டி (துள்ளி)

சுருட்டி சாப்பு:— மங்களம் ஜயமங்களம் மாதவக்கண் ணனுக்கு மங்களம் ஜயமங்களம் (சரணங்கள்) தங்கச்சதங்கை பணித் தாமரைக்கண்ணனின் தாமரைத்தாளினைக்கு சதாவு மங்களம் (மங்களம்) சிங்கார இலைமீது சிங்காரப்பள்ளிகொ ள்ளும் சிங்காரக்கண்ணனுக்கு செகமகிழ் மங்களம் (மங்களம்) இலைத் தளிரில் போன்று எழிலுடன்விளங்கிடும்-வளங்கொண்ட பொன்னடி மலரிணை தனக்கு (மங்களம்)

181104

கலிகாலம் முற்றலாச்சுதே:— ஊரெல்லாம் கேலி காட்டுதே கண்ணனே யுன்பெயரை யெடுத்து காட்டுதே- பாரெல்லாம் தான் பாவி பட்டியிலதுபாவி- பரிஹாசம் வந்து கூட்டுதே கண்ணைய பாரென்னை மிகவும் வாட்டுதே (ஊர்) நல்லனெனப் பெயரெடுப்பாயே கண்ணனே நாடெல்லாம் நீ சிறப்பாயே- எல்லார் தம்மில் நீயுயா இன்னிசையை யதனைப்பெற வல்லவ என்னைக் கேளய்யே இப்பொழுதே மதியையே பூண்டொழுகையே (ஊர்) காம்பிலே கையை வையாதே பசுதானும் கடிந்து பாயாதே- வீம்புகள் நீ புரிந்து வீணுய்த்தரையில் வாழ்ந்து- சோம்பலில் ஆழ்ந்துவிடாதே கண்ணனே சூதுபொய் வஞ்சம் நாடாதே (ஊர்) மடுவினில் ஆடிடாதேடா கண்ணனே மறை பாம்பை நீ பிடியாதே- கொடு விஷம் கக்கியது கூத்தாட்டி வைக்குமையா இனிதாக வந்து சொன்னனே கண்ணனே இசைவாய் வந்து பாரேனீ (ஊர்) பெண்களைக்கேலி பண்ணுதே அதனால் பெயரைக்கெடுத்துக்கொள்ளாதே- எண்ணில்லாப்பிழைகள் செய்து எங்குமே நிந்தை யெய்து புண்ணிய அசடனுகாதே ஐயனே பொறுமையால் நடனம் செய்யாதே (ஊர்)

பூபாள ராகம் சாபபு தாளம்:- கண்ணனே எழுந்திரு கருமுகில் எழுந்திரு கருணை சீர் நல்முத்தே எழுந்திரு புண்ணியா எழுந்திரு பூரண எழுந்திரு புகழிசை வேணுவை யேந்திடு(க)கோழிகள் கூவின குயிலோசை மேவின கோயிலில் வெண்சங்குயார்த்தனவே- ஆழியங்கரைகாற்று அழகாக வீசுது அச்சுதக்ருஷ்ணனே யெழுந்திரு (கண்) மல்லிகை மலர்ந்தது மத்தோசை நிறைந்தது மஹிதலமுழுமையும் எழுந்ததே- நல்லவேளை யிது நயமான வேளையிது நளினமுகக்கண்ணு எழுந்திரு (கண்) அய்யனே எழுந்திரு அப்பனே எழுந்திரு ஆருயிர் நற்றுணை எழுந்திரு- மெய்யான புகழ்கொண்ட ராயனின் நேயனே விரைவாக நாடி நீ யெழுந்திரு (கண்)

ஜோதீஸ்வரி மேல் பாட்டு சுருட்டி ராகம் ஆதிதாளம்:—

ஜோதிமணி தீபதாயே கண்ணும் நீ துணையையருள்வாயே (ஜோதி)

அநுபல்லவி:— ஆதியே நல்லறிவே அன்பான தேவியே அநுதினம் உன்னைப்பாடவே செய்வாய் (ஜோதி) சிங்கார மேடையையிட்டு நானுனக்குச் சிங்காரக்கோலம் இடுவேன்- இங்கித இசை தந்து எந்நாளும் நீ மகிழ்ந்து இன்பமே பெருக்கி இனியதே யீகுவாய் (ஜோதி) மாலைதோறும் வந்து நானுனக்கு பாலையைச்சூட்டி- கோலாலமாகவே கும்பிட்டு பூஜிப்பேன் சோதிலா வாழ்வை குணமாக அருள்வாய் (ஜோதி) கருணையும் இருள் கடிப்பாய் எப்போதும் அறிவையே யளிப்பாய் சிந் ஞான ரூபியே விஸ்வஸ்வரூபியே மெய்யேமேலே பாக்கியம் என்றுமே யீவாய் (ஜோதி)

ஜோதீஸ்வரி ஸ்துதி நாதநாமக்கிரியை ராகம் சாப்புதாளம்:-

ஜயமங்களம நித்ய சுபமங்களம் [ஜய] சதானந்தம் அன்னையே ஜோதியே அகிலாண்ட நாயகி- பொன்னுநின்னடி போற்றவே செய்தருள் (ஜய) பக்ஷ்தார்யென்னை நீ பரிவுடன் தான் காத்து அக்ஷயமாம் சேரபனம் அனுதினமீகுவாய் [ஜய] குற்றமே யிருப்பினும் குறைகளே யிருப்பினும்- உற்றதாயுன்னையே உன்னருள் தந்தருள் [ஜய] நல்லதோர் ஞானமும் நல்லதோர் செய்கையும் வல்லவி யெனதனி வாடாது ஈகுவாய் [ஜய] தாயே நான் உன் சேயே தயவாகப் பார்த்தருள்— நேயமாய் நின் துணை நீடூழி தந்தருள் [ஜய] சத்தியமும் தானமும் தளராதோங்கவும்- பக்தியும் ஞானமும் பரிந்தோடி யீகுவாய் (ஜய) புத்ர சந்தானமும் புகழ்பெருமை பாக்கியமும்- உத்தமி தாயே நீ உதவுவாயெந்நாளும் [ஜய]

இந்த திவ்ய ஸ்ரீ காமாம்ருத க்ரந்தம் புஸ்தகரூபமாய் வெளிவர உதவிய எல்லாப்பெரியோர்களையும் மனப்பூர்வமாய் அபிவந்திக்கிறேன்,

நா. ரா. நாராயணன்,
ஆழ்வார்திருநகரி.